உ

சிவமயம்

ஸ்ரீகாசிவாஸி சேந்திநாதய்யரால் வெளியிட்ட

வச்சிரதண்டமும்—தாந்திரிகதுண்டகண்டனகண்டனமுமாகிய

# சிவாகம தூஷணப்ரிஹாரம்.

இஃது பிரமஸ்ரீ ஸத்யோஜாத சிவாச்சார்யஸ்வாமிகள்
அவர்களின் சிஷ்யகோடிகளிலொருவராகிய
தத்புருஷ சிவத்தாலியற்றப்பட்டு,

ஸ்ரீலஸ்ரீ பொளுவாம்பட்டி ஆருமுகம்பிள்ளை அவர்களால்
தமிழ் பரிசோதித்துப பதிப்பிக்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி
ரிவ்யூ அச்செந்திரசாலை.
1911

இதின் விலை அணா 2.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வச்சிரதண்டமும்

## தாந்திரிக துண்ட கண்ட கண்டனமும் ஆகிய சிவாகம தூஷண பரிகாரம்.

---

### கணபதி தோத்திரம்.

வேதா கமந்தனி லாகமந் தான்றனி மேலெனவே
யோதா தவர்தமை யோதுவிப் பான்புக லிவ்வுரையைப்
போதாகத் தஞ்சிர மேலேற்றிப் போற்றிப் பொருளறிவார்
மேதாவி யாந்திரு வாழ்வருள் வேழ முகத்தவனே.

### குருவணக்கம்.

சிவனருண் முகத்தி லுற்பவித் தவரிற் சிறந்துவாழ் சைவசித் தாந்தத்
தவநெறி யலது பவநெறி யாகுஞ் சார்ந்தமற் றவையெலா மெனவே
யிவனெனக் குண்மை ஞானம்வந் திடமோ றிசைத்தருட் சத்தியோ சாதன்
பவளமென் விரலார்ப் பதமலர்ச் சூடிப் பகருது மிப்பெரு நூலே.

எம்மனோர்களாகிய சைவாபிமானமுள்ள அன்பர்கள் யாவருக்குந் தெரிவித்துக்கொள்வதாவது.

ஸ்ரீ காசிவாசியாகிய செந்திநாதய்யரென்பவர், இதற்கு கொஞ்சநாளுக்குமுன் வெளிப்படுத்திய வச்சிரதண்டமும் தாங்

திரிகதுண்டகண்டகண்டனமும் என்னும் புத்தகங்களைக் கண்ணுற்றோம்.

அவற்றுள் பரமாச்சாரியமூர்த்திகளாகிய ஸ்ரீமத் ஜகத்குரு ஸத்யோஜாத சிவாச்சாரிய சுவாமிகளையும், மற்றுமுள்ள சிவாச்சாரியர்களையும் தூஷித்திருப்பதுமன்றி, நமது சித்தாந்த சைவத்திற்கு முரணாகிய வேறு கருத்துக்களை யிடையிடையே நாட்டப்பட்டிருத்தலின் அவைகளை முற்றிலும் களைந்தெறியும் வேலையை எமது ஆச்சாரியமூர்த்திகளுக்குக் கொடாமல் எறும்பை நசுக்க பெருந்தடிவேண்டுமா என நினைந்து அவர் சிஷ்யகோடிகளிலொருவனாகிய யாமே அப்பணியைக்கைக்கொண்டிறகேந்தத்துணிந்தோம்.

எமது சுவாமிகளாகிய குருநாதரால்வெளிப்படுத்தியவேதாகமதராதம்யத்தில் வேதவேதாங்கங்கள் யாவும் அபரவித்தையெனவும், சிவாகமம் பரவித்தையெனவும் ஸாதித்திருத்தலின் அவையிற்றைநோக்கிய நமது நண்பர் தமதபிமதத்திற்கு விருத்தமாயிருந்தமைப்பற்றி மனம் பொறுது எமது குருசுவாமிகளை நாயென்றும் பேயென்றும் சுருதியர்த்தங்கள், ஒவ்வொன்றில் தவறுண்டவரென்றும் சூதசம்ஹிதைசுலோகத்தைப் பாரதத்தி லுள்ளதெனத்தவறிக்கூறினாரெனவும், இவைகளை மற்றெந்தச் சிவாச்சாரியர்களும் அறியவில்லையெனவும் குறைகூறித்தூஷித்திருப்பதோடுங்கூடப் பிரமாணம் வேதங்களெனவும், மகோபப் பிரமாணம் காமிகாதியாகமங்களெனவும் உபப்பிரமாணம் புராணங்களெனவும் உபநிஷத்துக்கள் பரவித்தையெனவும், இங்ஙனமே வியாசர், வித்யாரணியர், முதலிய பரமாச்சாரியர்களது அபிப்பிராயமெனவும், ஆதலின் இதுவே யாவர்க்கும் ஒப்ப முடிந்த பிரமாணமெனவும், எடுத்துக்காட்டிச்சித்தாந்திக்க முயன்று, நடுக்காவேரிபிரமஸ்ரீ, ஸ்ரீனிவாஸதீக்ஷிதரோடு வாதித்து வெற்றிக்கொடி நாட்டியதாயும் வரைந்திருக்கின்றார்.

நன்றாயிருக்கின்றது. பிரகிருதோபயோக மற்ற ஷ்டி தீக்ஷிதருடைய பிரஸ்தாபம். இங்ஙனம் யாதுக்கோ சன்யாசியார்க்

கும் எமது சுவாமிகளுக்கும் நடந்த சம்பாஷணங்கள் யாவை யென்பது பூர்வபக்ஷியாருக்கு விளங்கியிருக்குமேல் வச்சிரதண்டமும், தாந்திரீகதுண்ட கண்டகண்டனமும் எழுதக்காரணமில்லை. இவர், சன்யாசியாரைக் கண்டித்தோமென்பதற்கு அவர் கூறிய ஞாயங்களை முன்னர்ப் பூர்வபக்ஷமாக்கிப் பின்னரன்றோ தமதுசித்தாந்தங்களைநாட்டவேண்டும். அங்ஙனமின்றித் தாமும் சன்யாசியாரைப்போலவே முன்பின் தொடர்ச்சியற்று விகர்ப்பப்பொருள்களை வருவித்துக்காட்டுவது தானா சாஸ்திரீகமான கண்டனம் எமது சுவாமிகளுக்கும் சன்யாசியார்க்கும் நேர்ந்த சாஸ்திரா சங்கை விவாதமானது சிவாகமங்கள் வேதங்களிற்றாழ்ந்தவைகளென்றும் வேதாதிகாரமற்ற சூத்திரர்முதலியோர்களுக்கே பயன்படத்தக்கவைகளென்றும் அபரிபாகமுடையார்க்கே சிவாகமங்கள் கூறியுள்ளாரெனவும், சன்யாசியார்வாதம்-வேதங்கள் அபரவித்தையெனவும், சிவாகமங்கள்பரவித்தை எனவும்வேதங்கள் கேவலம் கர்மப்பிரதிபாத்திய முடையதெனவும்-ஞானத்திற்குச் சிவாகமங்களோடயிக்கமுற்றுப் பயனளிக்குமெனவும், மூவருணத்தார்க்கும் கர்மமாத்திரையாற் பயன்படுமன்றிச் சிவாகமங்கள்போல் ஞானேச்சுவாகிய சர்வான்மாக்களுக்கும் பயன்படாதெனவும் சிவாகமங்கள் யாவற்றினும் சிறந்த மெய்நூல்களெனவும், இந்நான்முகத்தானே பரிபாகமுடைய யாவரும் பயன் அடைவாரெனவும் சுவாமிகள் விவாதம் இவ்விவாதத்தில் நமது நண்பர் குறுக்கிடுதல் முறைமையோ.

இவர் ஸ்ரீனிவாச தீக்ஷதரோடு சிவாகமங்களுக்குச் சிரௌதாசிரௌத வியவகாரங்களைப்பற்றி வாதிக்கப்புகுந்து வச்சிரதண்டம் கரு-ம் பக்கத்தில் வரைந்துள்ளபடி வாயு சங்கிதா சுலோகத்திற் குரைத்த பொருள் குற்றமுடையதென தீக்ஷிதர் கண்டித்தபோது நமது குருநாதரன்றோ தீக்ஷிதரைக் கண்டித்து விடையளித்து வந்தார் முன் தீக்ஷிதரால் பூர்வபக்ஷமாக்கி யொதுக்கிய பொருள்களையேயன்றோ. மீண்டும் வச்சிரதண்டத்தில் வரையப்புகுந்தனர், இது கற்றோர்கட்கழகாகுமா.

இங்ஙனம் இவர் ஷ தீக்ஷிதரைச் செயித்ததாக கூறுதற்குக்காரணமாயுள்ள விஷயத்தை யீண்டு வருவித்துக்காட்டுவோமாக.

அதாவது: வாயு சங்கிதை காமிகாதி சிவாகமங்களைச் சிரௌதமென்று கூறியிருக்கிறதென நமது அய்யரும் அசிரௌதமென்று கூறியிருப்பதாகத் தீக்ஷிதரும் செய்துகொண்ட வாதம். இதற்கு இருதிறத்தாரும் எடுத்துக்காட்டும் பிரமாணமொன்றே. அது ஶைவாகமோபி த்விவித: ஶ்ரௌதஶ்சாஶ்ரௌத ஏவ ச! ஶ்ருதிஸாரமய: ஶ்ரௌத: ஸ்வதந்த்ர இதரோ மத:! ஸ்வதந்த்ரோ தஶதா பூர்வம் ததாஷ்டாதஶதா பர:। காமிகாதி ஸமாக்யாபி: ஸித்தாந்தாபிதயா புந:! ஶ்ருதிஸாரமயோ ந்யஸ்த: ஶதகோடிப்ரவிஸ்தர:।

என்னும் வாயு சம்மிதா வசனத்திற்கு அய்யரவர்கள் வச்சிரதண்டத்தில் வரைந்திருக்கும் பொருளாவது ஶைவாகமோபி த்விவித: ஶ்ரௌத: அஶ்ரௌத ஏவ ச! அந்தச்சைவாகமமும்—வைதிகம் அவைதிகமென இருதிறப்படும் ஶ்ருதிஸாரமய: ஶ்ரௌத: சுருதிசாரமாயுள்ள வைதிகாகமமானது, ஸ்வதந்த்ர: இதரோ மத: ஸ்வதந்திராகமமும் இதராகமமுமாய்க் கொள்ளப்படும் ஸ்வதந்த்ரோ தஶதா பூர்வம் ததாஷ்டாதஶதா பர:। காமிகாதி ஸமாக்யாபி: ஸித்தாந்தாபிதயா! ஸ்வதந்திராகமமானது முன்னர்ப்பத்தும் பின்னர்ப்பதினெட்டுமாய் ஆக இருபத்தெட்டாய்க் காமிகாதி நாமங்களோடு முடிந்த சித்தாந்தமெனப் பெயர் பெறும் ஶ்ருதிஸாரமய: ந்யஸ்த: ஶதகோடிப்ரவிஸ்தர: சுருதிசாரமாயுள்ள இதராகமமான மற்ற வைதிகாகமமானது, நூறுகோடி விரிவினதாகும்—என்பது அய்யரவர்கள் அபிப்பிராயம். இதற்கு ஸ்ரீநிவாசதீக்ஷிதரவர்கள் கூறிய பொருளாவது. சிவாகமங்கள் சிரௌதம், அசிரௌதம் என இருவகைப்படும். இதில் சிரௌதம் சுருதிசாரமாயுள்ளது

அசிரௌதம் வேதங்களைத்தழுவாது சுவதந்திரமாய் நிற்பது. இந்த சுவதந்திரமுடையதானது முன்னர்ப்பத்தும் பின்னர்ப்ப தினெட்டுமாய்ப் பேதப்பட்டுக் காமிகாதி இருபத்தெட்டாகச் சித்தம் சித்தாந்தம் என இருபேதமுடையதெனவும் சுருதிசார மாயுள்ள சிரௌதாகமங்கள் நூறுகோடி விரிவினதாயுள்ளதெ ன்பதுமே.

இவ்விருவர்களுடைய அபிப்பிராயங்களில் எது சரி? எது சரியல்ல ? என்பதை உற்று நோக்குவோமாக ஸ்ஸெளவாமஃ ஃ சுவிதிவிய ஃ சைவாகமங்களானது . இரண்டு பிரிவினதாய் ஸெ்ரௌத ஃ அஸெ்ரௌத ஃ வஸூூத ஃசிரௌதம், அசிரௌதம் என்னும் பாகுபாடுடையதாய் ஸ்ரு திவஸாரமயஸெ்ரௌதஃ சுருதிசாரமாயுள்ளது. சிரௌதமெனவும் ஹூதந்த்ரஃ ஐதாரஃ உதஃ அஸெ்ரௌதஃ

வேதங்களுக்கு இதரமாய் ஸ்வந்திரமுற்று விளங்குவது அசிரௌதமெனவும் ஹூதந்த்ராஉஸயாவ-ந-வ-ம்தயாஷ்டாஉ ஸயாவ-நஃ । காமிகாதிப்ரஹெமெஉநவஸிஜவஸிஜாஜஸஞ்ஜ்ஞத ஃ இந்த ஸ்வதந்திரமுள்ளதே முன்னர்ப்பத்தும் பின்னர்ப் பதி னெட்டுமாய்ப்பேதப்பட்டு காமிகாதி திவ்ய நாமங்களால் சித்தம் சித்தாந்தமென விளங்குவனவெனவும் ஸ்ரு திவஸாரமயஃ அநரஃ தஸதகொடிப்ரவிஸ்தர ஃ ! சுருதிஸாரமாய் இதற்கன்யமாய் நூறு கோடி விரிவினதாயுள்ள ஆகமங்களிருக்கின்றது என்பது மேற்கண்ட வாயு சங்கிதை சுலோகத்தினுடைய உண்மைக்கரு த்தென்று வெளியாகின்றது.

இதற்கு அய்யரவர்கள் கூறிய பொருள் பொருத்தமற்ற தாய்க் காணப்படுகின்றது. மேலும் சிரௌதம், அசிரௌத மென ஆகமங்களை இருகூறுக்கின்ரேயொழிய அவற்றுள் சிரௌ தங்களிவையெனவும் அசிரௌதங்களிவையெனவும் தனித்தனி ப்பிரித்து காட்டினாரில்லை. ஹூதந்த்ர ஃஐதாரஃஉதஃஎன மூன்றுக்கி உதஎன்றவிடத்தில் மவுனமுற்று ஸ்வந்திராகமம், இதராகமமு

மென இரண்டுவகைப்படுத்திக் காமிகாதியாகமங்களைச் சிரௌதமென்றதோடுங்கூட ஷை காமிகாதியாகமங்களல்லாமல் நூறு கோடி விரிவினதாயுள்ள வைதிகாகமங்களு மிருக்கின்றனவென்று முடிவு கூறினரேயன்றி அசிரௌதாகமங்க ளிவைகளெனக்கூறினரில்லை. சிவாகமங்களை அசிரௌதமெனக்கூறின் தம்மை வைதிகர்தமக்குட் சேர்க்கமாட்டார்களோவென்னும் அச்சமேற்கொண்டு சுருதியதீதபரவித்யா ரூபஸ்வதந்திரமுடைய சிவாகமங்களைச் சுருதிவயப்பட்ட சிரௌதாகமங்களெனக்கூறினர்போலும்.

உண்மையில் சிவாகமங்கள் சிரௌதமாயிருந்தால் மேற்கூறித்த வாயு சங்கிதை அவைகட்கு ஸ்வதந்திரத்வம் பாராட்டி நிற்கும் பயன் யாதோ. மேலும் அவைகள் சித்தம் சித்தாந்தம் என இரண்டு பேதப்படுமென்று வற்புறுத்திக் கூறியதெற்றுக்கோ. இச்சிவாகமங்களையெல்லாம் சிரௌதமென்பது. ஷை வாயு சங்கதையின் கருத்தாயிருந்தால் இதற்கன்னியமாய் நூறு கோடி விரிவினதாயுள்ள வைதிகாகமங்களுமிருக்கின்றன வென கூறுமா. கூறின் முன்னோடு பின் முரண்பாடுடையதாகு மன்றோ இவைகளையெல்லாம் நோக்காது சந்தேக விபரீதங்களுக்கிடமுண்டாக விகற்பப் பொருள்களையெல்லாம் இடையிடையே வைத்துப் பொருள்விரித்துரைப்பதில் யாது பயன். இதனால் இதை ஸ்ரீனிவாச தீக்ஷிதர் இலகுவில் பூர்வபக்ஷமாக்க நேரிட்டதெனத்தெற்றென விளங்குகின்றது.

இனித்தீக்ஷிதருக்கு எமது குருநாதர் விடையளித்திருக்கும் விஷயங்களை யீண்டெடுத்துக் காட்டுவோமாக.

श्रुतिसारमयः श्रुतिजत्वात् श्रुतेः कश्चित् श्रु-
तेर्जन्मनः सारमयः यतः परमात्मनः श्रुतिमूर्ध्वा-
धिकारश्च यश्शैवश्रौतः स्वतन्त्रस्त्वनन्यशिवात्मकः
यतः स्वतन्त्र इतरो मतः कामिकादिस्वतन्त्रो दश
धा पूर्वं तथाष्टादशधा पुनः । काष्टादशधापि नः

[illegible]

என்னும் வாக்கியங்களை யெடுத்துக்காட்டி சிவாகமங்கள் சிரௌதம்-அசிரௌதம்-என இருவகைத்தாய் அவற்றுள் சுருதியைத் தழுவியது சிரௌதமெனவும் தழுவாது தாமே ஸ்வதப்பிரமாணமாய் நிற்பது காமிகாதியாகமங்களெனவும் பெயர்பெறுமாதலால் காமிகாதிகள் அசிரௌதமென்பது சொல்லாமலேயமையும் சுருதிகள் . அபரமேயாதலால் பரமாகிய சிவாகமங்கள் அபரத்தைத்தழுவுதல் யாங்ஙனம் கூடும். தழுவுமேல் தமது பரத்துவங்கெட்டு மித்தைப்பொருளை வருவித்துக்காட்டுமன்றோ. இதனால் பரத்துவமான சிவாகமங்களை அசிரௌதமெனலுசிதமாயிற்று.| ஆனால் அசிரௌதம் வேதபாஹ்யமாகாதோவெனில் தாம் ஸ்வதப்பிரமாணமுடைய பரசுருதியாயிருப்பதால் இதை நீத்துநின்ற சிரௌதாகமங்கள் வேதபாஹ்யத்துவமடையுமன்றிச் சிவாகமங்கள் வேதபாஹ்யமடையக் காரணமில்லை. ஏனென்றால் பாசுபத மதம் உபநிசத் தந்திரத்தால் வெளிப்பட்டுள்ளவை. உபநிஷத்துகள் வேதசிரசாயிருப்பினும்பாசுபதர்க்கு வேதபாஹ்யத்துவம் கூறப்படுதலின் உபநிஷத்துக்களின் முடிபொருள் பரவித்தை

யைச் சேராவிடங்களில் வேதபாஹ்யத்துவமமையப்பெறும். இத ற்கு இதையன்றி பாசுபதாகமமெனத் தனித்து வேறொரு சிவாகமமுமில்லை. ஆனதால் மேற்கண்டபடி உபநிஷத்தால் கூறப் பட்ட பாசுபதவிரதமே பாசுபதமதமெனப்படும். இப்பாசுபதர் கேவலம் வேதமந்திரத்தால் வீபூதியைக் குழைத்திட்டு இதை யே பாசுபதவிரதமெனக்கூறுவார்கள். வீபூதியிடுதல் முதலிய வையெல்லாம் சிவாகமங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் படி நடந்து பசுத்துவத்தை நீக்கிக்கொள்ளாதவொருவனைக் கொன்றாலும் தோஷமில்லையெனச்சூத சங்கிதை வற்புறுத் திக் கூறுதலால் மேற்கண்ட பாசுபதமதம். வேதபாஹ்யமாகு மென்பது தெற்றெனவிளங்குகின்றது. இங்ஙனமன்றி சிவாக மங்களுக்கு வேதபாஹ்யத்துவம் கூறுவது வேதமறியாதவர்க ளியற்கையாம். இவ்வுண்மைகளையெல்லாம் எம்மால் செய்து வெளிப்படுத்திய சிவநிந்தகபிரச்சன்ன பௌத்தகுரோடபங்க வச்சிராயுதம். 203-ம் பக்கத்தில் பரக்கக்காணலாம். இக்காரணம் பற்றி சிரௌதாகமங்களான உபநிஷத் தந்திரங்களை நோக்க சிவாகமங்கள் விசேடமென்பதுதானே போதரும்.

தடிஷூ஖ஷுா-ிவஷுஶுளதாஶுளதவிஹெஉத ஃ! ஶிவா
மஜெடிஙயாஹிநஂதடிஷூஂஶுளதெவவ ! ஷுா-ிவவிஷய ஜ்ஜா
நஜெஶுளதஜிதிகீதி-தஂ। ஶுதஷுஶுாதுவிஷயஂவுத
கூஜஶுதஂஹவெஜு ! ஷுதஃ வஜோணாாஹிதஂ ஶுதெள
ஷஂயொஜிதஷெயஜு ! ஶுளதஷுதிஷஜாவதஜஷுதஜு
ஜிதிஷூதஂ ।। ஷுதஷிஜவஜோணெவ ஶுதிஷூஉநஷாரிணி!
ஶிவஜ்ஜாநவஉாஂவிஉாஂஜெஶுளதஜிதிரியதெ ! ஶுளதஂ
ஶுதிவிர-ஜஷுஜஶுதிரெவவரிஹெஜு । ஶிவாஜஜா
விரொயெநஶுதிஷு ஷஂஹெஜுஹாஃ விர-ஜஷுஜு
வஜிதஜாஜஂஷஂஹூணியாஶிவாஜஜஂ

என்னும் ஸகஸ்திரா கமவாக்கியத்தால்சிவாகமங்களானது. தடஸ்தம், சொரூபம் எனப் பேதப்பட்டுள்ளதெனவும் இவற்

றுள் தடஸ்தமென்பது சிரௌதமெனவும் சொரூபமென்பது அசிரௌதமெனவும் சுருதியென்பது காதுகளுக்கு விஷய மாயுள்ளதெனவும் அசிரௌதமென்பது பிரத்தியக்ஷத்தில் அனு பவிக்கதக்கதெனவும் சிரௌதமென்பது சுதப் பிரமாணமா யிருத்தலன்றிச் சுருதியைச் சேர்ந்திருக்கும் காரணத்தால் அசு வதந்திரமெனவும் தமக்குத்தாமேஸ்வதஸித்தப்பிரமாணமாய்ச் சுருதியைச் சாராது ஸ்வதந்தரமாயிருத்தலால் அசிரௌதமென வும் சிரௌதம் சுருதி விருத்தமாயிருப்பின் சிரௌதாகமத்தை நீத்துச் சுருதியைக்கொள்ளவேண்டுமெனவும் சிவாகமங்களுக்கு விரோதமில்லாத சுருதிகளையே கிரகிக்கத்தக்கதெனவும் விரோ திக்கும்பட்சத்தில் அச்சுருதிகளை நீக்கி சிவாகமங்களையே கைக் கொள்ளவேண்டுமெனவும் கூறியிருத்தலால் சிரௌதமென்பது வைதிகமாயின் இது பற்றி அதியாத்மகம் அதிமார்க்கம் மாந் திரீகமென்னும் பேதத்தால் மேன்மேலும் உயர்ச்சிபெற்று பிரகா சித்து அனுக்கிரக ரூபமான பரவித்தையாகும். சிவாகமங்களை இம்மூன்று படிக்குந் தாழ்ந்துள்ள வைதிகத்தோடொப்ப முடி த்து அபர வித்தையாக நினைந்து ச்சிரௌதமெனச் சுட்டியது. கற்றோர்மற்றோர்க்கெல்லாம் அருவருப்பைத் தருகின்றது.

மீமாம்சம், நியாயம், வைசேடிகம் இம்மூன்றும் வைதிக நூல்களெனவும் சாங்கியம், பாதஞ்சலம், வேதாந்தம் இம்மூன் றும் அத்யாத்மிக நூல்களெனவும் பாசுபதம், காபாலம், மஹா விரதம் இம்மூன்றும் அதிமார்க்க நூல்களெனவும் பெயர் பெற் று க்கர்மவாதமுடையதாயொழிந்தன. மாந்திரிகமோ சித்தா ந்தமெனும் பெயர்பெற்று பத்தி, யோகம், ஞானம் இவைகட்கு உயற்சி தந்து நிற்றலால் பரவித்தையாகும், சிவாகமங்களேயா தலால் இதன் முன்னர் பூர்வபட்சியார் கூறும், சிரௌதம் எங் ஙனேகனம் பெறும்.

சுருதியென்பதோ அல்ப சுருதியென்றும், பிரபலச் சுருதி யென்றும் இருவகைப்படும். பிரபலம் அல்பத்தைக் கலவாத தினால் சுருதியன்றென்பது கருத்தன்றாம். இதன் விரிவை

எமது சுவாமிகளால் வெளிப்படுத்தியுள்ள வேதாகம தாரதம்மி யத்தில் பராபர சுருதிபேதம் விளக்கியவிடத்தில் கண்டு தெளிக.

இம்மகிமைதங்கிய பிரபல சுருதியாகிய சிவாகமங்களை மகோபப் பிரமாணமெனச் சுட்டிக்காட்டியது தகுதியோ. உப ப்பிரமாணம் பிரமாணப் பிரசித்தமேயன்றி மகோப பிரமாணம் மகா மகோபப் பிரமாணம் முதலிய அப்பிரசித்த வசனங்களை பிரமாணங்கள் அங்கீகரிக்கவிரும்பினதில்லை. இவர் வச்சிர தண்டம் எ-ம் பக்கத்தில் வித்தியாரண்ணியர் உபப் பிரமாணமெனக் காட்டியதைச் சற்று யோசிப்போமாக

𑌕𑌾𑌮𑌿𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌾𑌗𑌮𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌵𑌨𑍈𑌵 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌬𑍍𑌰
𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌭𑍍𑌯𑌯𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂𑌹𑌃 𑌸𑌵 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌵𑌤𑌾𑌰𑍇𑌣 𑌵𑍍𑌯𑌾𑌸𑍇
𑌨 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇𑌷𑍍𑌵𑌵𑌿𑌶𑍇𑌷𑌃

என்னும் வாக்கியமே-இந்த வாக்கியத்தில் காமிகாதியாகம ங்களை உபப்பிரமாணமாய்க்கூறியுள்ள பதம் யாது. இந்த வாக்கி யமானது சூத சங்கிதையின் மூல சுலோகமா அல்லது வியாசர் திருவாக்கா அல்லது வித்தியாரண்ணியர் வியாக்கியானமா மூலமாயிருந்தால்-சுலோகமாயிருக்குமன்றி வியாக்கியான ரூப மாயிருக்கக் காரணமில்லை. வியாசரோ சூதசங்கிதைக்கு வியா க்கியானம் செய்தவரன்று. ஆதலின் அவர் வாக்காகவுமிராது. வித்தியாரண்ணியர் வாக்கேயாகுமெனின் அவர் மூலத்தை எழு தாது வியாக்கியானத்தைமட்டும் எழுதியிரார் இவரெடுத்துக் காட்டுவதாயிருந்தால் அம்மூலமொன்றையோ அல்லது மூலத் தையும் வியாக்கியானத்தையுமன்றோ எடுத்துக் காட்டல்வேண் டும். அதை விடுத்து வியாக்கியானத்தைமட்டும் எடுத்துக்கா ட்டுவதின் பயன் யாதோ. எவ்வாறுனுமாகுக. இந்த வாக் கியத்தில் சிவாகமங்களையுப ப்பிரமாணமாய்க் கூறியிருப்பதாகத் தெரியக்காணோம். ஆனால் இவ்வாக்கியம் புராணங்களை நோக் கக் காமிகாதியாகமங்கள் உயர்ந்ததெனக் கூறுகின்றது. இத னால் புராணங்களுக்கு மேற்பட்டது வேதங்களேயாதலால் சிவா

கமங்கள் பரசுருதியாயிருத்தலின் வித்யாரண்ணியரும் இவற்றை முதற் பிரமாணமாய்ப் புராணங்களிலும் விசேடமெனக்கூறுதலவசியமாயிற்று. இச்சிவாகமங்கள் சிவபெருமானது திருமுகத்தினின்றும் வெளிப்பட்டுள்ள மெய்நூல்களாதலின் இவற்றைப் பிரமாண்மாக்க வற்புறுத்திக் கூறிய வித்யாரண்யர் திருவாக்கும் எமக்கே சாதகமாயின. புராணத்திற்கு மேலாயுள்ளது வேதமேயாதலால் வேதாகமங்கள் அபரம்பரமெனச்சாமாண்யவிசேடம் பெற்றுச் சுருதிகளாயிருத்தலின் இவ்விரண்டும் பிரமாணமென்பது வித்யாரண்யர் கருத்து. இங்ஙனமே கல்விமான்களாகிய மகாத்மாக்கள் யாரும் பிரமாணம் உபப்பிரமாணமெனக்கூறினர். இஃதன்றிம கோபப்பிரமாணம் மகாமகோபப்பிரமாணமென வலிந்து பொருள் கொண்டு சொன்னரில்லை இங்ஙனம் வலிந்து பொருளெடுக்க மேல் குறித்த வாக்கியமிடந்தரவுமில்லை. ஆதலின் இவர் கூற்று முயற்கோடாய் முடிந்தது நிற்க.

வச்சிரதண்டம் 27-ம் பக்கத்தில் அய்யரவர்கள் வரைந்திருக்கும்:—வாஜொயொமவய-ஞொ யஜ-ஶ்ரு-திஶிரொ
மத:! ஸவாயஜவெரொயஜ-: வாயஜ-ஸ்யஸாய நம! யஜ-
ஶாஸ்த்ரா ஹி: ஸஜுக் ஸாஂமவணவொவஙாஹ்ஜித:। தத்ரா
ஜெ்யொவரொயஜ-: ஶ்ரேஷ்டா நஷ்டாநஶஙீத:
ஐதிஹாஸ வபாணாஹ்ராஂகுயஂஜிஜவஙாஹிதஃ। ஶெ
வாமஜெஷ்ஸவந ஸஹாஂமொவாஂமவிஷ்ர:! ஸஂஸ்காரா
ஜயிகாராஜு ஸஜுமெவொவஙாஹ்ஜித:

என்னும் வாயுசங்கிதை வாக்கியத்திற்கு இவர் அடியிற்கண்டபடி பொருள் கூறியிருக்கின்ருர். அதாவது யோகத்தை முடிவாகக்கொண்ட பரதரமம் உபநிடதங்களில் அமைந்ததெனவும் இது தர்ம சாஸ்திரங்களால் சாங்கோபாங்கமாய் உபப்பிரமாணஞ் செய்யப்படுமெனவும் 'முதற்கணுளதாய் முக்கியமாய் அனுஷ்டிக்கப் பாலதாம் (எனக்கூறப்பட்ட யோகபரியந்தமுள்ள) பரதர்மம் இதிகாசபுராணங்களினுல் பிரயாசை

யோடு (அதாவது சிற்சிலவற்றிற்கு) உபப்பிரமாணஞ் செய்யப் படுமெனவும் அது பின்னர் சிவாகமங்களினால் சாங்கோபாங்க மாய் ஸம்ஸ்காரத்தோடு உபப்பிருங்கணஞ் செய்யப்படுமென வும் பொருள் கூறியிருக்கின்றார்.

இப்பொருள் முன்னொடு பின் முரண்பாடெய்தலால் உண்மைப்பொருளெதுவோ அதை எடுத்துவிளக்கிக்காட்டு வோமாக:—

அதாவது சுருதிசிரசாயுள்ள உபநிசத்துக்கள் யோகப்பரிய ந்தமே கூறுதலால் இதையே பரதர்மமெனக் காட்டா நிற்கும் இந்த உபநிஷத்துகளால் பரதர்மமெனக் கூறப்பட்ட தர்மமா னது அபரதர்மமேயாதலால் இவ்வபரம் பரதர்மத்திற்குச் சாதனமாத்திரமாய் அமையப்பெறுதலால் தர்ம்சாஸ்திராதிக ளினால் செவ்வையாய்ச் சாங்கமாகவே உபப்பிரும்ஹிதமாகும் இதில் முதலிற் கூறிய பரதர்மமானது சிரேஷ்டமான அனுஷ் டானங்களைச் சொல்வதால் இதிகாசபுராணங்கள் ஒருக்காலும் உபப்பிரும்மிதமாகாதெனவும்—சைவாகமங்கள் மறுபடி சாங் கோபாங்கப்ரத்யங்க விஸ்தாரமாய் ஸம்ஸ்காரங்களையும் கூறுவதால் இதிகாபுராணங்கள் இச்சிவாகமங்களுக்குச் செவ் வையாக உபப்பிரும்மிதமாகும் எனப்பொருள்கொண்டு நிற்ற லால் இதிகாசபுராணங்கள் சிவாகமங்களை முதற்பிரமாணமாக் கித்தாம் உபப்பிரமாணமாய் நின்று நற்பொருள் விரித்துக்காட் டும் இதுவே அதன் உண்மைப்பொருள்.

இவை வேதத்திற்குப பிரமாணமாகாதோவெனின் வேதங் கள் யோகபரியந்தமே பரமென நிற்றலாலும் ஞானபாதமின்றி யமையாக்கருவியாயிருத்தலாலும் இதிகாசபுராணங்கள் இவ் வேதங்களுக்கு நேரே உபப்பிருங்கணமாதலெங்ஙனங் கூடும் அல்பசுருதி பிரபலசுருதி இவ்விரண்டும் ஏகோபித்து நிற்குமி டங்களில் இதிகாசபுராணங்கள் இதற்குபபிரமாணமாதல் குற் றமன்று பிரபலத்தை அல்பம் பிரிந்துநின்றவிடத்தில் இவ்வல்ப சுருதி இதிகாசபுராணங்களை உபப்பிரமாணமாக்கிக்கொள்ள

நினைப்பது கணவனை மறந்து இச்சிசுவை நாமே பெற்றேமென மமதைகொள்ளுந் தாயின் கதைபோல் முடியப்பெறும்.

இக்கருத்தையுட்கொண்டே வாயு சங்கிதையானது இதிகாசபுராணங்கள் சிவாகமங்களுக்கே உபப்பிரமாணங்களாயிருக்குமென்பதை நன்கு விளக்கிற்று வாயு சங்கிதையினுட்பொருள் இங்ஙனமிருக்க இவர் உபநிஷத்துக்களுக்குப் பரத்துவம் நாட்டப்புகுதல் தகுதியோ.

பரம் ஞானத்தை முடிவாகக்கொண்டிருத்தல் அவசியமாதலின் யோகத்தை முடிவாகக்கொண்டுள்ள வேதசிரசுக்களாகிய உபநிஷத்துக்கள் பரமாதல்யாங்ஙனங்கூடும் மேலே காட்டிய வாயுசங்கிதை வாக்கியமே உபநிஷத்துக்களை யபரமெனக்கழித் தொதுக்கிச் சிவாகமங்களைப் பரமெனச் சாதித்துவிட்டது இவ்வருமை பெருமைகளைச் சிறிது மோராது. நம் சிவாச்சாரிய சுவாமிகளையும் மற்றுமுள்ள சிவாச்சாரியர்களையும் கண்டபடி தூசித்தும் சில சுருதியர்த்தங்களிற்றவறுண்டவரெனவும் பழித்தல் அழகாகுமோ.

நமது சுவாமிகள் சுருதியர்த்தங்களில் தவறுண்டவரென. இவரெடுத்துக் காட்டிய விஷயத்தைப் பரிகரித்தொதுக்குவாம் யதா தமஸ்ஸும் என்னும் சுருதிக்குப் பகல் இராத்திரியில்லாதவரெவரோ அவரே சிவமென்றெழுதிய வழுவைச் சன்யாசியாரும் அங்கீகரித்துத் தாமும் வழுப்பட்டவராயினர் எனச் சன்யாசியாரைத் தூசிப்பவர்போல நமது சுவாமிகளுக்குந் தெரியாத் தனத்தைக் கற்பிக்கமுயன்றனர்—நமது சுவாமிகள் அதற்குரைத்த பொருள் பதவுரையா கருத்துரையா வென்பதையிவரின்னுமறியார். சுவாமிகள் கூறியது காலாதீதரென்பது காலாதீதம் என்பது சர்வ சம்மாரகாலமே. ஆதலால் யாவும் தம்முளடக்கித்தமக் கன்னியமாய் வேறொன் றில்லாததாய்த் தாமேகனாய் நின்ற தருணத்தையேயன்றே நமது சுவாமிகளது உரை வெளிப்படுத்திக் காட்டியது இஃதுணர்ந்து சன்யாசியார் மவுனமாயிருந்தது அவர் விவேகத்திற் கழகேயன்றிக் குறைவன்றாம்.

இதற்கு நமது நண்பர் பொருளுரைத்ததாவது. எப்பொழுதும் இருளுளதாய் பகலுமின்றி யிரவுமின்றிச் சத்துமின்றி அசத்துமின்றியிருந்ததோ அப்பொழுது சிவனொருவரே இருந்தாரென்பது.

தாமேகனய் நின்றவிடத்தில் இருளொன்றிருப்பதாய் வருவித்துக்காட்டினர். இருளும் உள்ள பொருளாயிருக்குமாயின் தாமேகனென்பது கூடுமோ இருளை இராவெனக் கூறுவதா? பகலெனக் கூறுவதா? அவ்விருளெங்கேயிருந்தது. பூமியிலா ஆகாசத்திலா ஆகாசத்திலெனில், ஆகாசம் ஜடமாயிற்றே. ஜடம் அசித்தாதலால் சித்தும சித்துமின்றி யெனக்கூறிய பொருள் சிறக்குமா மேலும் சிதாகாசத்தில் இருக்குமெனில் ஸ்வப்பிரகாசப் பரப்பிரகாசமுடைய சிதாகாசத்தில் இருளிருக்ககாரணமின்ரும், இவர் கூறியபொருளில் இருளொன்று ஆகாயமொன்று சிவமொன்று ஆக மூன்று பொருள்களும் என்றுமுள்ள பொருள்களாய் விளங்கப்பெறுதலின் ஏக மெனக் குறித்த திழுக்கன்றே. இவற்ருல் நமது சுவாமிகள் சுருக்கமாய்க் கூறிய சிற்றுரையே இவருரையினு மேலாயினவாறறிக நிற்க.

வச்சிரதண்டம் 8-ம் பக்கத்தில் நமது சுவாமிகள் ௯ஷ௱௨ஃ௱ என்னும் சூதசங்கிதையிலுள்ள சுலோகத்தைப் பாரதத்திலுள்ளதாய்க் கூறியவிடத்தும் இந்த வழுவைச் சன்யாசியார் கண்ணுறக் கண்டிருந்தும் எடுத்து விளக்காதிருந்தது. தமது கக்ஷிக்கு பாதையா மெனக் கருதி மவுனமுற்ருரென்றனர்—சிவக்ஞான சித்தியார் ஸ்வபக்ஷம் 215ம் பக்கத்தில் சிவாக்கிரயோகிகளுரையில் இந்தச் சுலோகம் பாரதத்திலுள்ளதாய் எடுத்துக் காட்டியிருக்கின்ருர். இனிச் சிவாக்கிரயோகிகளையும் தெரியாதவரெனக் கூறுவார்போலும் சன்யாசி யாருக்குப் பாரதமும் பிரமாணந்தான் சூதசம்மிதையும் பிரமாணந்தான் இவற்று ளெதிலிருந்தாலும் நமக்கென்ன வென மவுனமுற்ருரேயன்றி அதில் இல்லை இதிலில்லை யெனக்கூற வெளிவந்து மவுனமுற்ருரில்லை. சூதசம்மிதையிலும் இப்பிரமாணமிருந்தால் பாதகம் யாதோ.

சித்தாந்தலேச சங்கிரகத்தை ஆகம மென்றறியாது தமக்குப் பிரமாணமாய்க் கூறினமையால். சுருதியர்த்தத்தில் தவறுண்ட சத்யோஜாத சிவாச்சாரியாரேனும் மற்றெந்தச் சிவாச்சாரியாரேனும் சூதசங்கிதையிலே இன்னவிடத்தில் இந்தச் சுலோகமிருப்பதாய்ச் சன்னியாசியாருக்குக் காட்டாதிருந்தாராக, இந்தச் சித்தாந்த லேசசங்கிரகசிவாகமத்தைக் கவனித்துப் பார்க்கமாட்டாரென்றும் நமது நண்பர் சன்யாசியாரைப் பரிகசிப்பவர்போல் சிவாச்சார்யர்களையும் ஒன்றுமே தெரியாதவர்களெனத் தூசிக்க யெத்தனித்தார் சித்தாந்தலேச சங்கிரகமென மூலாகமமிருந்தாலன்றோ நமது சுவாமிகளும் மற்றுமுள்ள சிவாச்சாரியர்களும் கவனித்தல் அவசியமாகும் இந்தச் சித்தாந்தலேசசங்கிரகம் மூலாகமமா-உபாகமமா-பத்ததியா இவற்றை யிவரேனும் கவனித்து விடைதருவாராக, இந்தக்கேவலம் சந்தேக நிவர்த்திக்கு எத்தனை சிவாச்சாரியர்கள் வேண்டுமோ அறிந்திலேம் எந்தச் சிவாச்சாரியர்களும் சித்தாந்தலேசசங்கிரகத்தை மூலாகமமென ஒருபோதுங் கூறத்துணியார், வித்தியாரண்யர் முதலிய சிலர் அற்ப சுருதியாகிய சில அபரவித்தைகட்குப் பாஷியம் செய்துள்ளாராதலின் அதனுலவை விளங்கும் பிரபலசுருதிகள் இவர்களில் யாவர் பாஷியத்தினுல் விளங்குகின்றனவெனலெங்ஙனங்கூடும். வித்தியாரண்யராயினும் மற்றுமுள்ள யாவராயினும் பராபரசுருதிகளுக்கிணங்கக்கூறுராயின் அவர் வாக்கை யாமொருபோதும் அங்கீகரியோம். இணங்கக் கூறுவரேல் அது எமக்குற்றஸ்வதஸ்ஸித்தாந்த பிரமாணமாயின

இதுகாறும் கூறிய பல ஞாயங்களால் உபநிஷத்துகளைப் பரவித்தையென்பதையும் வைதிகபாசுபததீக்ஷை பெறுதலே யுசிதமென்பதையும் வேதாதிகாரமற்ற சூத்திரர்க்கே சிவாகம தீக்ஷைபெறலவசியமென்பதையும் வித்யாரண்யர். முதலினோர் சிவாகமங்களை யுபப்பிருங்கணமாய்க்கொண்டனரென்பதையும் சிரௌதாகமங்களே விசேடமென்பதையும் ஸ்வதந்திரமுடைய சிவாகமங்கள் சுருதிகளைத் தழுவுதல் வேண்டுமென்பதையும்

கண்டித்துப் பூர்வபக்ஷமாக்கி எமது சித்தாந்தத்தை நிலைநாட்டினோம் இனி மற்றுள்ளனவற்றையுமெடுத்துக்காட்டிப் பரிகரித்தொதுக்கி யெமதுண்மையை நிலைநிறுத்தப்புகுவோமாக.

வச்சிரதண்டம் 9 வது பக்கத்தில் சிவாக்கினி கற்பித்து அதனுற்றஹனம் பண்ணுக எனப்பொருள்கொள்ளும் நான்கு சுலோகங்களை சிவாகமத்தினின்றும் உதகரித்துக்காட்டிய பின்னர் இன்ன மந்திரங்கொண்டு விரஜாக்கினி பஸ்பம் செய்யவேண்டுமென வித்யாரண்யர் தீபிகையில் உரைத்திருக்கின்றமையால் சிவாக்கினி பஸ்பமும் விரஜாக்கினி பஸ்பமும் பெருமையினுல் சமத்துவமுடையதென்றும் இது சூதாச்சாரியராலும் மற்றுமுள்ள வைதிகராலும் ஒப்பத்தககதென்றும் வரைந்திருக்கின்றூர்.

இவற்றுள்* விரஜானலபஸ்பமாவென்பது சிவாகமங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து சிவாக்கினி பஸ்பமாவெனக் கண்டு பிடித்ததற்கேதுவாயிருக்கின்றது. இஃதன்றி விரஜானலமெனத்தனிப்பெயர் கொண்ட வேறோரக்கினியில்லையானதால் இவ்வக்கினி சிவாக்கினியென்பதே திண்ணம்.

அக்கினிகளென்பது சிவாக்கினி, வைசுவநராக்கினி, தெக்ஷணக்கினி, காரகபத்தியாக்கினி, ஆகவனீயாக்கினியெனப் பல பேதங்களாயிருத்தலின் இவ்வக்கினிகள் யாவற்றுக்கும் உள்ள பிரயோஜனங்களைப் பரவித்தை கூறி முடிக்கும், அபரவித்தையானது சிவாக்கினியைத் தவிர்த்து மற்றுள்ளவக்கினிகளையே பெரும்பயனுகக் கூறுநிற்கும். மேலும் வைதிகர்கட்கு ஒளபாசன வக்கினிகோத்திராதி கர்மங்களில் உபாசிக்கப்படுவது வைசுவநராக்கினியேயாதலால் இவர்களுக்கு விரஜானலாக்கினி புதுக்கியது எங்ஙனங்கூடும் இவ்விரஜானலாக்கினி தன்னையுபாசிப்போர்க்கன்றோ பயன்படும். இதனுல் வைதிகரானோர் விரஜானலத்திற்குரியோரன்றென்பதாய் ஓதுக்கப்படும். இவ் விரஜானலம் பாசுபதர்க்குக் கூறிய விதியாதலின் வேதமந்திரங் கொண்டு விபூதியணிந்து பாசுபதராக விரும்புவோரை வேத

பாஹ்யரெனப் பிரமாணங்களே யொதுக்குவதால் இப்பாசுபதமஹாத்மியம் பரவித்தையேயாகும் சிவாகமங்களில் அடங்கப்பெற்றிருத்தலால் விரஜானலமென்பது சிவாக்கினியென்பதே தீர்மானம். இம்மெய்ப்பொருளை நீத்துச்சிவாக்கினிபஸ்பமாவும். விரஜானலபஸ்மாவும் மகிமையினுல் சமத்துவமுடையதெனல் வேதமறியாதோர் கூற்ரும். விரஜானலமென்பதே சிவாக்கினியாயிருக்க இதற்குச்சமனுக அன்யாக்கினியிருந்தாலன்ரோ சமரஸீபாவம் கனம்பெறும்-சிவபெருமானுக்குச்சமனுக வேருரு தெய்வமும் சிவாக்கினிக்குச் சமமாக வேரோரக்கினியுமிருந்தாலன்ரோ நமதையரவர்கள் சொன்னசமத்துவம் கனம்பெறும் கேவலம் வைதிகர்கட்கெல்லாம் அக்கினிஹோததிரபஸ்பமாவேயன்றி விரஜானலபஸ்பமாவை இவர் சாதிப்பதிழுக்காய் முடியுமன்ரோ-விரஜானலம் சிவதீக்ஷாங்கமாய் சிஷ்யர்கள் தூலமலம் நீக்கம்பெற பஸ்பம் அணிதற்பொருட்டு யாகசாலே நவகுண்டம், முதலியன கற்பித்து நவதனுவாத்மகரான பரமேஸ்வர ரூபமாய் கோமயாதிகளை அவ்வவற்றிற்குறிய மந்திரங்களாற் பகுத்து அவ்வவக்குண்டங்களில் ஸ்தாபித்து சிவாக்கினி பாலாக்கினியந்தம் ஸம்ஸ்கரித்து நவாக்கினி விபஜனம்செய்து ஒவ்வொரு குண்டங்களிலும் அந்தந்த அக்கினியை ஸ்தாபித்து ஐந்து தினமேனும் மூன்று தினமேனும் ஒருதினமேனும் ஓமஞ்செய்து பிரதிகாலத்திலும் நைவேத்திய தீபதூப நீராஞ்சனுதிகளும் செய்து முடிவில் சிவபெருமானிடத்துப் பசுக்களின் ஸ்தூலமலத்தைப்போக்கி அனுக்கிரகித்தற்கு இந்த விரஜானலம் செய்கின்றேன் அவ்வாறே அனுமதி தந்து இரக்ஷித்தருளவேண்டுமெனப்பிரார்த்தித்துப் பராங்முகார்க்கியங்கொடுத்து அந்த அககினி சாந்தமாகும் வரையில் நைவேத்தியாதிகள் செய்து சமனமானபின் விபூதியெடுத்து வைத்துக்கொள்வது விரஜானலப்பஸமாவெனப்பரவித்தை யுதகோஷித்துப் பிரகாசிப்பதால் இந்த விரஜானல பஸ்மாவும் சிவாக்கினி பஸ்மாவும் சமத்வமுடையதென இவர் சாதிக்க வெளி வந்ததானது சிவாக்கினிக்கன்யமாய் வேதமந்திரங்களால் இவ்விரஜானலம் செய்யப்படுமென்னும் கருத்துடைமையைக் காட்டுதற்கே வந்தவராவர்.

இந்தச் சந்தேகத்தை எம்மால் வெளிப்படுத்தியுள்ள சிவனிந்தக பிரசன்னபௌத்தக்ரோட பங்கம் உ௰௪-ம் பக்கத்தில் பஸ்மங்கள். ௬ பேதங்கள் கூறிய வைசுவராக்கினி ஜாடராக்கினி பரமேயாதலால் இதிலுண்டாகும் பஸ்மம் அகல்பமெனவும் இது சர்வஜனப்பரிக்கிரஹீதமன்றெனவும் சிவபெருமானையன்றி யிதரதேவதா உபாசகர்களுக்கும் சிவதீக்ஷையில்லாதோர்க்கும் அணிதற்குரியதெனவும் அமங்களத்தையுண்டாக்குமெனவும் கேவலம் வேதமந்திரங்களால் விபூதியைக் குழைத்திடுபவர்கள் பாசுபதர்களென்றும் இப்பாசுபதமஹாத்மியம் யாவும் சிவாகமங்களில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் அந்த ஆகமங்கள் கூறியவாறே பசுத்துவத்தை நீக்கிக்கொள்ளாதவொருவனைக் கொன்றாலும் தோஷமில்லையெனக்கூறும் சூதசங்கிதவாக்கியத்தால் சிவாகம வழியன்றி வேதமந்திரங்கொண்டு விபூதியைத்தீண்டுதலும் கூடாதென்பதை நமது வச்சிராயுதம் உ௰௩-ம் பக்கத்தில் நன்கு விளக்கிக்காட்டியிருக்கிறோம்.

சிவாக்கினி பஸ்பமாவோடு கேவலம் வைதிகாக்கினி சம்பந்தமான வைசுவானராக்கினி பஸ்மா சமத்துவமாதலெங்கனங் கூடும் இதனால் சிவாகமங்களோடு ஐக்கியம் பெறாத வைதிகபாசுபதம் குற்றமென்பதே தீர்மானம்.

சிவாகமங்கள் அபரசுருதிகளைப் பரத்துவத்தால் வயப்படுத்தி ஸ்வதந்திரமாய் நின்று நற்பொருள் விளக்குதலால் இவ்வபரம் பரத்தோடைக்கமாகாவிடத்துச் சுருதிகளாயிருப்பினும் பரங்கெட்டு வேதபாஹியத்துவமெய்தப்பெறும். அபரசுருதியாகிய வேதங்கள் சார்வாகமாதியோக பரியந்தமுள்ள மதங்களையெல்லாம் தமக்குள்ளடக்கி உயர்ந்த ஞானத்தை மட்டும் தம்முள் அடக்கப் பெறாதிருத்தலின் அபரமெனவும் தமக்குள்ளடங்காத பரமொன்று மேலுளதெனவும் கண்டு மவுனமாயிருத்தலால் சுருதிகள் யாவும் சிவாகமங்கட்கே முடிபொருளாயிருத்தல் காண்க. இதற்கு பாஹியமான அபரசுருதிகள் வேதபாஹியமென்றும் அபரசுருதிகளை விரோதித்த சைவாகமங்கள் வேதபாஹியமன்றென்பதுமே உண்மை.

வைதிகம் எவற்றினும் சிறந்ததாயிருக்க இதற்குமேற் சிறந்த மார்க்கமொன்றிருப்பதாய்ச் சொல்வது குற்றமாகாதோவெனின், ஆகாது. ஏனென்றால் இலௌகிகம் வைதிகம் அத்யாத்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என மார்க்கங்கள் ஐந்தாயிருப்பதால் இலௌகிகத்திலுயர்ந்தது வைதிகம் வைதிகத்திலுயர்ந்தது அத்யாத்மிகம் அத்யாத்மிகத்தினுயர்ந்தது அதிமார்க்கம் அதிமார்க்கத்தினுயர்ந்தது மாந்திரிகம் இங்ஙனம் முறையே ஒன்றுக்கொன்று உயர்ந்ததாய் விசேடித்துநிற்பதால் வைதிகம் உயர்ந்ததென்பது கூடுமோ. இரண்டாவதாயிருக்கும் வைதிகம் முதலாவதாயிருக்கும் இலௌகிகத்தினுமுயர்ந்ததேயன்றி மற்ற மூன்று மார்க்கத்துக்கும் தாழ்ந்த மார்க்கமென்பதே தீர்மானம். இதன் விரிவை நமது குருநாதர் வெளியிட்டிருக்கும் வேதாகமதாரதம்மியம் 11, 12-வது பக்கங்களிலெழுதியிருப்பதை நோக்கித் தெளிவெய்துவராக.

இங்ஙனமாயின் சுருதிசாரமாய்ச் சதகோடிப்பிரவிஸ்தாரங்களான சிரௌதாகமங்கள் கூறப்பட்டிருப்பதாய் வாயுசங்கிதை புலம்புதலுக்கு கதிதான் யாதோவெனின் கோடியென்பது ஒன்றையே குறிக்கும் நாளொருகோடி சொல்லி முடித்தேனென்னுமிடத்து ஒருகோடி கக்ஷி சொல்லி முடித்ததாக பொருள்படுமோ, ஒரு கக்ஷி சொல்லி முடித்ததாகவே பொருள்பட்டு நிற்கும். இதுபோல் நூறு கோடியென்பது நூறெனவே பொருள்படும். ஆதலின் அந்த சதோபநிஷத்துகளும் சதகோடிப்பிரவிஸ்தரங்களான சிரௌதாகமங்களும் நூறு பிரவிஸ்தரங்களென்பதே பிரமாணம். இந்த உபநிஷித்துகள் அபரசுருதி சம்பந்தமாய் நிற்றலின் இதற்குச் சிரௌதாகமமெனப் பெயர் வருதலுசிதமாயிற்று. சிரௌதம் சுருதி சம்பந்தமுடையதெனப் பொருளாதல்பற்றித் தமக்குச் சுதந்தரமற்றுச் சுதந்தரமெல்லாம் சுருதியினிடத்திருக்கத்தாம் அசுவதந்திரமாய் நிற்றற்கேதுவாயிற்று இதனால் சிரௌதாகமங்கள் ஸ்வதந்திரமற்றதென்பதே நிச்செயம் நிற்க.

வச்சிர தண்டம் ௫அ-ம் பக்கத்தில் உபநயன சம்ஸ்கார முள்ள மூவருணத்தாருள் எவர்கள் சுருதியில் அதிகாரமுடையவர்களோ அவர்கள் அந்தச்சுருதி வாயிலாகவே பரத்துவத்தையெய்த பாலர் எவர்கள் சுருதியில் அதிகாரமில்லாதவர்களோ அவர்கள் ஆகமங்களின் வாயிலாகவே பரத்துவத்தையடையப்பாலர் என வித்யாரண்யர் தீபிகையில் கூறியிருப்பதாயும் இப்படியே ஸ்ரீகண்ட சிவாச்சாரியரும் கூறியிருப்பதாயும் எடுத்து விளக்கினர் உபநயனமாதி சமஸ்காரங்கள் அபர சம்ஸ்காரமேயாதலின் பரஸம்ஸ்காரமற்ற இவ்வபரம்-பரத்தைக்காட்டுமென்பது குருவுக்குக் குதிரைமுட்டை வாங்கிக்கொண்டுவந்த கதைபோலாம். உபநயனமானது சார்வாகம், ஜயினம், தம், ஸ்மார்த்தம், வைஷ்ணவம், சைவம், முதலிய பிராமணர்கள் யாவர்க்கும் ஒப்பமுடிந்த ஸம்ஸ்காரமே யாதலின் இது வருணத்திற்கே பொருத்தமாகுமன்றி ஸமயங்களுக்குப் பொருத்தமாகாது சமயத்தை நோக்க வருணம் கேவலம் சாமான்யமேயாகும். இதுபற்றி வருணம் அபரமும் சமயம் பரமுமாய் மேற்பட்டு நிற்றலால் பரஸம்ஸ்காரமற்ற உபநயனமாதி அபரஸம்ஸ்காரமானது பரத்தைத்தருமென்பது எஞ்ஞான்றும்பொருந்தாவாம் இவ்வபரஸம்ஸ்காரம் பரஸம்ஸ்காரத்திற்குச் சாதகமாகுமன்றிச்சாத்தியமாகுமென்பது இழுக்காய்முடியும். இதனல் பிராமணர் முதலிஞேர்க்கு உபநயனமாதி சம்ஸ்காரமே பரதத்துவ விளக்கமுடையதென்பது சாஸ்திர விருத்தமாகும். அபரம், பராபரம், பரம், என ஸந்தி மூன்ருயிருத்தலின் இம்மூன்றும் வைதிகம், அஸ்திரம், சைவம், எனப்படும். இவற்றில் வைதிக சந்தியால் பரமேசுவர பரிக்கிரகஸ்வரூபமான ஜகத்தையுள்ளபடி யுணர்தலும், அஸ்திரசந்தியால் அப்பரமான சிற்சத்தியால் விளங்கத்தக்கவரென்பதும், சைவசந்தியால் இவையாவற்றிற்கும் நிமித்தபூதமாய்ச் சிவபெருமான் ஒருவரேயுளரென்பதும் சுட்டியுணரத்தக்கதாயிருத்தலின் சைவசந்தியை நோக்க அஸ்திரசந்தி தாழ்ந்ததும் அஸ்திர சந்தியைநோக்க வைதிக சந்தி தாழ்ந்ததுமாய்க் காணப்படுதலால் இரண்டுபடிகட்குத் தாழ்ந்துநிற்கும் அபரசம்ஸ்காரமாகிய உபநயனமாதி சம்ஸ்காரம் பர

தத்து விளக்கமுடையதென்பதை யாவரோ வொப்புவர். இதனாலேயே பிராமணத்துவ சித்தியுண்டாமென்பதும் சித்தியாவாம் பிராமணன் பரமேசுவரேயாதலாற் சிவோபாசனைக்குரிய அதீந்திரியத்துவமாம். சிவதீக்ஷாதி பரசம்ஸ்காரத்தால் சிவத்துவமெய்தப் பெறுமோர் பிராமணராதல் எங்ஙனங்கூடும். பிராமணத்வம் சித்திக்கவேண்டின் அபரசுருதியாகிய வேதங்களிற் கூறியவாறே. உபநயனமாதி சமஸ்காரங்களைப் பெற்றப்பின்னர் பரசுருதியாகிய சிவாகமங்களிற்கூறியவாறு சிவதீக்ஷாதிசத் பாவங்களையடைந்துள்ளவர்க்கு மாத்திரமே பிராமண சித்தியுண்டாவதற்கேதுவாம். அன்றேல், பிராமண சித்தியெங்ஙனே சித்திக்கப் போகின்றது. இதனாலன்றோ ஸ்ரீநீலகண்ட சிவாச்சாரிய சுவாமிகளும் தமது சித்தாந்த பாஷியத்தில் வெத-த்ரயிவணி-கவிஷய: ஸவ-விஷயஸ்தாகம:, என விளக்கினார் இதன்கருத்தாவது. வேதங்களிற் சாமான்ய விஷயங்கள் மாத்திரமேயடங்கியிருத்தலின் இவ்வேதங்கள் மூன்று வருணமாயுள்ள சாமான்யர்களுக்குமட்டுமே பயன்படத்தக்கவைகளென்றும் இதற்கு மேலாய் அன்னியமாயிருக்கும் சிவாகமங்கள் எல்லா விஷயங்களையும் தம்முளடக்கிக்கொண்டு பிரகாசிப்பதால் பிராமணராதியாவர்க்குமே பயன்படத்தக்கவையெனவும் போந்த உண்மையை வெளியாக்கினார். இஃதன்றி சட்சூத்திரர்க்கே சிவாகமங்களைச் சர்வமான்யம் விட்டுவிடவேண்டுமென்பது அவர்கருத்தன்றே.

வேதாதிகாரமற்ற சூத்திரர் சிவாகமங்களாற் பரதத்துவத்தையடையக்கடவதெனயாம் கூறின் பிராமணர் முதலினோர்க்குப் பரதத்துவ விளக்கத்தைத்தரும் மெய்நூல்களெவை. அவை வேதங்களே யெனின் அவ் வேதங்கள் பரம் அபரம் என இருகூறாய் நிற்றலின் பரதத்துவத்தை விளக்குவது பரமா, அபரமா, அபரம் பரத்தை யொருபோதும் விளக்காது, பரமே பரத்தைவிளக்குமியல்புடையதுபற்றி இப்பரம் சூத்திரர்க்கே சொந்தப்பொருளாய் நின்று பிராம்மணர் முதலினோர்க்கு சொந்தப்பொருளல்லவென்பது நமதையாவர்கள் கருத்தோ அற்ற

ன்று இருக்காதி வேதங்களை பரமெனவும் இதனால் பிராமணர்க்குப்பரங்கொடுக்கும் சொந்தப்பொருளாகுமெனின், அவ்வேதங்களை பரம் அபரம் எனப்பாகுபாடெய்தி இருக்கு, எசுர், சாமம், அதர்வணம், என்ற நான்கும் வேதாகங்கம் ஆறும், அபர வித்தையெனக்கழித்துத் தமக்குமேல் பரமொன்றுளதெனச் சாதித்து நிற்றலால், பரவித்தைக்கு இவ்வேதங்கள் தாழ்ந்தவை யென்பதேபோதரும், பரம் வேதங்கட் கன்யமாயிருக்க வேதங்கள் பரதத்துவவிளக்கம் செய்வதெப்படி இஃதுணராத சன்யாசியாரும்பரதத்துவவிளக்கமுடைய சிவாகமங்களைச்சூத்திரர்க்கேயுரியதென வொதுக்கினர், இவரும் கூறித்திருப்தியடைந்தார். ஆதலின் சன்யாசியாருக்கிவர் ஞானம்போதிக்க வெளிவந்த இவரது ஆசாரியத்வந்தானேதோ, இதனால் பரிபாகிகட்கு வேதங்களும் அபரிபாகிகட்குச் சிவாகமங்களும் என்பதுதானே இவர் கருத்தாகின்றது.

இதுகாறும் கூறிய பலஞாயங்களால் சன்யசியார் கொண்டகருத்தும் நமதய்யரவர்கள் கொண்டகருத்தும் பரதத்துவிளக்கமுடையதன்றெனச் சாஸ்திரவாயிலாய்த் தீர்மானித்தொதுக்கினோம். இனி மற்றுள்ள விஷயங்களையும் வருவித்துக்காட்டி விஷயபரியாலோஜனை செய்யப்புகுவோமாக.

இவர் கூறிய உபநயனமாதி சம்ஸ்காரம் துவிஜத்வசித்திக்குரியனவாகலின் பிறவியாற் சூத்திரனும் கர்மத்தால் துவிஜனும் ஆதல் உரித்தெனப் பிரமாணங்கள் விளக்குதலால் சூத்திரர்க்குத் துவிஜத்வசித்தி வரும்பொருட்டு உபநயனமாதி சம்ஸ்காரம் விதிக்கப்பட்டுள்ள தென்பதுதானே போதரும். இது ஜன்மப்பிராமணர்க்குத் துவிஜத்வசித்தி கூறியவிடமெனின் ஜந்மநாஜாயதெ ஶூத்ர: கர்மணாஜாயதெ த்விஜ: என்னும் இந்த வாக்கியத்தால் ஜன்மத்தால் சூத்திரரும்கர்மத்தால் துவிஜருமாவரெனக்கூறப்படுதலால் ஜன்மப்பிராணருக்குத் துவிஜத்துவம் கூறியவிடமென்பது கூடுமோ. மேலும்இவர் கூறியவருணத்துள்ள ஒருவன் உபநயனமே செய்யப்பெறாமலிருந்தால் அவனைப் பிராமண னென்றாவது வேதாத்தியனத்திற்கருக

னென்றுவது சாதித்தங்கீகரித்தல் கூடுமோ, இவ்விதியை மேற்கொண்டொழுகில். ஏனை ஜாதி சூத்திரரும் துவிஜரா காதொழிவார். இதனால் சூத்திரர்க்கும் துவிஜத்துவசித் திவருமென்பதாய்ப் பிரமாண முகத்தாற்காணப்படுகின்றது, மூன்று வருணிகட்குமே வேதங்கள் சொந்தப்பொருளெ னச் சாதித்து நிற்க. ஜன்ம சூத்திரர் கர்மத்தால் துவிஜத்துவ சித்திபெற்று வேதங்களை அத்யயனம் செய்வற்குரியராவரோ உரியராவரெனில், சூத்திரரும் கர்மத்தால் சூத்திரத்துவம் நீங்கி வேதாத்தியயனம் செய்வதற்குரிய ராவரென்பதிற் சந்தேக மென்ன. இதனால் கேவலம் வைதிகரால் பிராமணத்துவ லட்சணமும், வேதாத்தியயன நெறியுங் கூறப்புகுவது இவ்வைதி கர்க்கே தலைவலியுங் காய்ச்சலுமாக முடியும்.

வேதங்கள் பூர்வபட்சமாகிய அபரவித்தையேயாதலால் இவற்றுற் கூறப்படும் பிராமணத்துவ சித்தியும் மூன்றோடு பின் முரண்படுதலால் சூத்திரர்க்கு வேதாதிகாரமும் உபநயனமாதி சம்ஸ்காரங்களும் இல்லையெனக்கூறியது. சிவாகமங்களால் நன்கு விளங்குமன்றி மற்றுள்ள நூல்களால் விளங்கப்பெறுவ தின்றும், சூத்திரர் கர்மத்தால் துவிஜனுவனெனக்குறித்தோதில் கர்மத்தைக் கைநழுவவிட்டு ஜாதி சூத்திராயிருக்கக் காரண மென்னையெனில் கர்மபலதாதாவாயிருக்கும் பரமேசுவரர் ஞான சொரூபியாயிருத்தலால் இச்சிவஞானம் அனுஷ்டித்தாலன்றிப் பரதத்துவம் கிட்டாதென்பதை முற்றுமுணர்ந்து ஞானமே தமக்குற்ற பரகெதியாய்க் கைப்பற்றி வாழ்பவராதலின் ஞானம ற்றதர்மம் இவர் பரத்துப் பயன்படுமாறெங்ஙனம் கர்மமற்ற ஞானமே பயன்படும் இதற்கிணங்க. வைதிகஞ வாஸாகூ ஷா வஶ்யாஹெைவிஂஸோவரெசு । விரஜஸஞெ துரிதயாஜ்யஂ நத ஶைவஂவரிதயெஜசு । என்னும்பரசுருதியால் வைதிக சந்தியை முன் செய்து சைவசந்தியைப் பின்செய்தல் வேண்டு மெனவும், விருத்தமாயிருந்தால் வைதிகத்தை நீக்கிச் சைவத்தை மட்டும் கொள்ளவேண்டுமெனவும், கூறியிருத்தலால்கர்மத்தைக் காட்டிலும்ஞானம்பலீயஸ என்பதும், கர்மத்தைவிடினும்ஞான

த்தைவிடக்கூடாதென்பதும் தெற்றென விளங்குதலால் கர்மத்தைக்கைவிட்டுஞானேச்சுவாய்நின்றசற்சூத்திரர்களுக்கு வேதத்தாலாயபயன் யாதுக்கோ, பரசுருதிகளைத் தமக்காதரவாய்க்கொண்டு அபரசுருதிகளைக் கைப்பற்றாதவர் 'சூத்திரராயிருப்பினும்' அபரத்தைக்கைப்பற்றி பரத்தைக்கைப்பற்றாதவர்பிராமணராயிருப்பினும்பிரஸ்டராவரென்பது திண்ணம் இதற்கேற்ப, ஈவிவா யஸ்ஹுணாஊஃஶிவஜ திவாஉம்வெஉஈ= தெ நஸஹஸ0ஜீத தெ ந ஸஹஸம்வெஉஈ= என்னுஞ் சுருதி வாக்கியத்தால் சண்டாளனாயிருப்பினும் சிவக்ஞானம் வந்தால் அவனோடு சேர்ந்து புசிக்கலாமெனவும் அவனுடனே தான் அளவளாவிப்பேசவேண்டுமெனவும் வசிக்கவேண்டுமெனவும் விளக்குதலால் சிவக்ஞானமற்ற பிராமணன் கதியாதாய் முடியுமென்பதை நமது ஐயரவர்களே யோஜிப்பாராக.

இதனால் அபரசம்ஸ்காரமாகிய உபநயனமாதி சம்ஸ்காரங்கள் பிராமணர்க்குரியதாயிருப்பினும் இவை பரதத்துவத்தை விளக்கமாட்டாதாகையால் பிராமணன் முதல் எல்லா வருணிகளும் பரதத்துவ விளக்கமுடைய சிவதீக்ஷை பெறுதல் அவசியமென்பது விளங்குகின்றது. இதனால் பிராமணருக்கு வேதங்களேபோதும் சிவாகமங்கள் வேண்டுவதில்லையென்னும் துர்வாதத்தை சாஸ்திரமுகத்தால் திரஸ்கரிக்கப்பட்டது. இவ்வாறுள்ள சித்தாந்த ஜன்னிய சிவஞானங்களையெல்லாம் உலகமுய்ய வெளிப்படுத்திவரும் நமது சுவாமிகளை இவர் பேய்நாயென்றது உசிதமாகுமோ.

சன்யாசியார் ஆதிசைவர்களைக் கௌலேயகமென சம்ஸ்கிருதபதத்தால்நாயெனக்குறித்தார் இவரோ தமிழ்ச்சொற்களால் பேய் நாயெனக்குறித்தார். இதுதானே சன்யாஸியாரைப் பூருவபக்ஷியாக்கித்தாம் சித்தாந்தியானது நிற்க.

வச்சிரதண்டம் கூறும் பக்கத்தில் தேவலக நிர்ணயம் செய்துள்ள விஷயத்தைச் சிறிதுற்று நோக்கப் புகுவோமாக. இந்நிர்ணயத்திற்கு ஸ்மிருதிமுக்தாபலமென்னும் கிரந்தத்தை

இவர் பிரமாணமாய்க் கைக்கொண்டு வியவகரிக்க வந்தவராத லின், இம்முக்தாபலம் மூலஸ்மிருதியா? பின் வந்தோர் செய்து ள்ள சித்தாந்தமா? சைவசித்தாந்திகள் மூலஸ்மிருதியையே வேதாகமபுராணவாயிலாய்ப் பூருவபக்ஷமாக்கக் கேவலம் இந்த முக்தாபலத்தையா பிரமாணமாகக்கொள்ளப்போகின்றார். அந்தோ கொடிது, கொடிது, தந்திரபேதத்தில் சுத்தம், மிச்ரம், கேவலம், எனப்பிரித்து எம்மால் வெளிப்படுத்தியுள்ள வச்சிராயுதத்தில் இதைப்பற்றி விவகரித்துள்ளோமாகையால், அங்ஙனம்காட்டிய பிரமாணமுகத்தில் இம்முக்தாபலம் யாதாய் முடியுமென்பதை இவருற்றுணர்வாராக. சூதசம்மிதை மன்வாதிஸ்மிருதி முதலிய வற்றை நிர் மூலம் செய்தொதுக்கியிருப்பதையும் வச்சிராயுதத்தில் இடையிடையே பிரமாணமுகத்தால் வெளியிட்டிருக்கிறோமானதால், டீ, கா, டீ, கா, ம, பேக்ஷியதே. என்பதற்கேற்ப மூலஸ்மிருதிகளிலிருந்தீண்டெடுத்து விளக்காது முக்தா பலத்தால் விளக்கியிருப்பதால் மூலத்தையே நீர்மூலப்படுத்தி யொதுக்கும் ஆற்றலுடைய சைவசித்தாந்திகளுக்கு ஒன்றுக்கும் பற்றாத கேவலம் முக்தாபலமா நிலைநிற்கப் போகின்றது. ஸ்மிருதிகளானது:சாக்தம், வைஷ்ணவம், பிராஜாபத்தியம், காணுதம், காபிலம் மன்வாதிகள், எனப்பலபடித்தாயிருத்தலால் இவை முறையே மன்வாதிகளை நோக்க காணுதமும், காணுதத்தை நோக்கக் காபிலமும், காபிலத்தை நோக்கப் பிராஜாபத்தியமும், பிரஜாபத்தியத்தை நோக்க, வைஷ்ணவமும் வைஷ்ணவத்தை நோக்கச் சாக்தமும் சாக்தத்தை நோக்கச் சுருதியும் சுருதியை நோக்கப் பரசுருதியும், உயர்ந்ததாய் ஒன்றின்பின்னொன்று பிரமாணப்பிரசித்தமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்க அவைகளைவிடுத்து ஒன்றினும் சேராத ஸ்மிருதி முக்தாபலத்தை இங்ஙனம்பிரமாணமாக்க முயன்றதற்குக்காரணமென்னையோ, அறிகிலம். மேலும், இவர் வைகான சோக்தமாய் விஷ்ணுபூஜை புரிபவர்களுக்குத் தேவலகத்வதோஷமில்லையெனவும், பாஞ்சராத்ரவிதானப்படி மேற்கண்ட விஷ்ணுவைப் பூஜிப்பவர்களுக்கித்தோஷமுண்டெனவும், கூறினர். வைஷ்ணவத்தில் பாஞ்சராத்ரமதமேயெவ்வெவப்புராணங்களிலும், பிராமணங்களிலும், ஆச்சாரிய

பாஷியங்களிலும், விளங்கப்பெறுவதால் இங்ஙனம் பொதுநூல்களில் பிரசித்தமற்றவைகானசம் விஷ்ணு பூஜைக்குரித்தாகுமா? எனச்சிலர் செய்யுமாக்ஷேபணைக்கிடமாயிருக்கிறது மேலும், விஷ்ணு புராணம், பாத்மபுராணம், முதலிய விஷ்ணுத்கருஷ புராணாதிகளிலும் பாஞ்சராத்திரத்திற்கன்றோ மஹிமை சிறந்திருக்கின்றது. இப்படிப்பட்ட பிரமாணங்களை ஆதரவாகக்கொண்டிராத வைகானச விதானப்படி செய்யும் பூஜைக்கு தேவலகத்துவதோஷமில்லையென்பது உண்மையான வைஷ்ணவர்களுக்கு அங்கீகாரமாகுமா ஶிவாஹ்நம் ஶைவஶிவத்விஜாநாம் வைகாநஸம் வைத்விஜாநவைவிஷ்ணோ: என்னும் நவீனமாய்ச் சிற்சிலர் புதுப்பித்து வைத்துக்கொண்டுப் பிரமாணமாகக்காட்டி வைகானசபூஜைக்கு விசேடங்கூறி வருகின்றார்கள். இந்த சுலோகம்வேதங்களிலா புராணங்களிலா ஆகமங்களிலா எங்குளதென ஆராய்ச்சி செய்ததில் பிரமாணக்கிரந்தங்களொன்றினும் மருந்துக்கும் கிட்டுவதரிதாயிருக்கின்றது. இந்த சுலோகம் சிவத்துவிஜர் பூஜைக்கு உயர்வு கூறுகின்றதேயெனின். இவர்கள் பூஜைக்கு வேதாகமபுராண மிதிகாசமாதிசகல பிரமாணங்களுமே உயர்வு கூறுகின்றது. இந்த நவீன சுலோகமொன்றில் உயர்வு கூறுவிடில் தாழ்வென்னையோ. இந்தச் சுலோகம் நவீனமானதென்று சைவாகமிகள் யாரும் ஆக்ஷேபணை செய்யாதிருக்கும் பொருட்டுச் சிவத்துவிஜர்களையும் பிரஸ்தாபித்ததேயொழிய வேறில்லை. சிவத்துவிஜர்கள் இந்தச் சுலோக விதிப்படியோ இதை யனுசரித்தோ பிரமாணமாகக் காட்டியோ பூஜைபுரிய வேண்டிய அவசியமுமில்லை. தங்கத்திற்குச் செம்பா உயர்வு கொடுக்கப்போகின்றது. இங்ஙனம் சிறப்பற்ற வைகானசர்களுக்கு மாத்திரமே இவை பிரமாணமாகும். பாஞ்சராத்திரத்தை மனு, காபிலம், காணாதம், பிராஜாபத்தியமாதி ஸ்மிருதிகளிலும் உயர்ந்த விஷ்ணு தத்துவ இரகசியங்களைக்கூறும் நூலாதாரங்களாகிய பிரமாணங்களைக்கொண்டு சித்தாந்த சைவர் ஒருவர் மாத்திரமே பூருவபக்ஷம் செய்து சிவபெருமானே பதிப்பொருளெனச் சித்தாந்தம் செய்யுமாற்றலுடையவராயினர். இவரன்றி மற்றோர் பாஞ்சராத்திரத்தைக் கிட்டவும் தாமுள

ரோ பாஞ்சராத்திரிகளும் சைவசித்தாந்திகளும் பதிப்பொருள் நிர்ணயத்தில் மட்டும் வேறுபட்டவர்களேயொழிய ஆகமங்களைப்பொய்யெனக்கூறவிசையார் சைவசித்தாந்திகளுக்கும் விஷ்ணு பரமாச்சாரியராய் விளங்கலால் இவ்வாச்சாரிய விஷ்ணு தத்துவ ரகசியப்பொருள்களைக் கண்டிக்கப்புகுவோரை யாமுங்கண்டித்தற்குப் பின்னிடோம். இதனால் விஷ்ணு பூஜைக்குப் பாஞ்சராத்திரவிதானமே சிறந்ததென்றும் இதற்குத் தேவலகத்துவ தோசமில்லையென்றும் சாதிக்கப்பட்டது. இது நிற்க.

கன்ம தேவலகரெனவும், கல்பதேவலகரெனவும், சுத்ததேவலகரெனவும், தேவலகத்துவத்தை மூன்றாக்கி விவகரிக்கப்புகுந்தார். சிவாகமோக்தமான சிவதீக்ஷை செய்யப்பெறாது கேவலம் வேதமந்திரத்தால் சிவபெருமானைப் பூஜிக்கப்புகும் வைதிகர்கட்கே சிவபூஜை பரார்த்தமாய் நிற்றலின் இவரை எந்த தேவலகரெனக்கூறுவது. சிவதீக்ஷையில்லாதோர் பாசபசுத்துவம் நீங்கப்பெறாத ஆன்மகோடிகளும் இவ்வான்மாப் பசுவென்பதும் சிவபெருமான் பதியென்பதும் பிரமாணப் பிரசித்தம். சிவபெருமான் பதியாயிருத்தலால் பசுவிற்குப் பதி அன்யமாகும் இதனால் பசுத்தன்மையுடையார் பதியைப் பூஜித்தலும் பரார்த்தமேயாகும் இதுபற்றி வைதிகர் செய்யும் ஆன்மார்த்த பூஜையிலும் தேவலகத்துவ தோஷமுண்டாகக் காரணமாயிற்று இதுவுமன்றிக்கிரகங்களில் விபவமுடையார் சிவபூஜை புரியக்கருதி மரணபரியந்தஞ் சிவபூஜைபுரிவதாய் குருநாதரிடத்தில் சிவலிங்கம் பெற்று தமக்குள்ள உத்தியோக முதலிய வேலைகள் சிவ பூஜை புரிவதாகிய சத்காரியத்தைத் தடுத்து நிற்கும்போது அத்தருணம் வேறு சாஸ்திரிமாரை வரவழைத்துத் தாமே நேரில் பூஜிக்கவேண்டிய சிவலிங்கத்தை அவர் கைக்கொடுத்துப் பூஜிக்கச் செய்வதால் தமக்கும் ஆன்மார்த்தம் கெட்டுப் பூஜிக்கும் சாஸ்திரிகட்கும் ஆன்மார்த்தமல்லாதொழிவதால் இவ்விருவருக்கும் இப்பூஜை பரார்த்தமாகின்றது, இப்பரார்த்த தோஷமுடையார் எந்தத் தேவலகராவார் இவ்வாறு பல ஆசங்கைக்கிடந்தரலால் கன்மதேவலகர், கல்பதேவலகர், சுத்ததேவலகர்,

அசுத்ததேவலகர், மிச்சிரதேவலகர் என்று மேலுக்கு மேல் தேவலகத்துவத்தை அடுக்கி அழகு பார்ப்பதால் யாதுபயன் ஸ்மிருதிகளில் சிவபூஜாதி சத்காரியங்களை விதிக்காதிருத்தலின் பூஜையாலுற்ற தோஷமாத்திரம் கூறும் வலிமை ஸ்மிருதிகட்கு ளதோவென்னும் ஆசங்கை மேற்கோளாய் நிற்கும், இத்தேவலகத்துவ விஷயமாய் நமது குருநாதர் வெளியிட்ட வேதாகமதாரதம்யம் ௯௩ முதல் ௯அ-வது பக்கம் வரை விசாரித்துப் பிராமாணபுரஸரமாய்த் தீர்மானித்துள்ளாராதலின் அப்பக்கங்களை நோக்கியுண்மையைத் தெளிந்திடுவாராக.

இதுகாறும் சிவாகமங்கள் ஊர்த்தவமுகத்தாலும் வேதங்கள் அதோ முகத்தாலும் வந்ததென்பதைப் பிரமாணப்புரசரமாய் யாவருமறிந்திருக்க, இவர் வேதங்களும் ஊர்த்துவமுகத்தால் வந்ததென்பதை எழுதப்புகுந்தார், இதற்குச் சிவாகம சுலோகங்களையே பிரமாணமாய்க் காட்டியிருக்கின்றேமென்று அச்சுலோகங்களையும் வெளிப்படுத்தியிருக்கின்றார். இந்தச்சுலோகங்கள் சிவாகமங்களிலிருக்கக் காரணமில்லை. இவ்விஷயங்களைத் தந்திராவதாரத்தில் கூறுதலவசியமாதலின் இவர்காட்டிய சிவாகமத்தின் தந்திராவதாரம் இச்சுலோகமின்றியமையாக்குறையாயிருத்தலோடும் மற்றும் புராணமிதிகாசமாதி பிரமாண நூற்களிலும் இவை அஞ்சன மருந்துக்கும் கிட்டுவதருமையாயிருக்கின்றது. இதற்கிவரெடுத்தாண்ட யுக்தியும் அதோமுகத்திலும் தாழ்ந்தவிடத்தினின்றும் வேதங்கள் வந்ததாய்ப்பொருள்பட்டு நிற்க. ஊர்த்தமுகோற்பவங் கூறினேமென்னும் வீண் பிரயாசையையிவரேன் வருவித்துக்கொள்கின்றார். சிவபெருமானது பஞ்சவதனங்களுள் ஊர்த்துவ முகத்தால் பரவித்தையாகிய சிவாகமங்களும் அதோமுகத்தால் அபரவித்தையாகிய வேதங்களும் தோன்றியுள்ளதென மெய்நூல்கள் யாவும் உத்கோஷத்து நிற்க ஊர்த்துவமுகத்தில் தான் வேதங்கள் வந்ததென்பதை யெங்ஙனே சாதிக்கப்போகின்றார், இதற்கிவர் யுக்தி கூறியதாவது பரமேசுவரருக்கு ஒவ்வொரு முகங்களிலும் அவ்வைந்து முகங்களுளதெனவும், ஆக முகம் ஐந்துக்கும் இருபத்தைந்து முகங்களுளதெனவும், இவற்றுள் ஊர்த்துவமுகம்

ஐந்தில் சிவாகமங்கள் தோன்றிற்றெனவும், அதோ முகங்களாகிய தற்புருஷாதி நான்கு முகங்களிலுமுள்ள ஊர்த்துவமுகங்களினின்றும் வேதங்கள் தோன்றிற்றென்பதே, இதுவன்றோயுக்திக்கழகு இவ்வாதம் வேதங்களுக்கு ஊர்த்துவமுகோற்பவங் கூறுமென்பதிழுக்கன்றோ. சைவசித்தாந்திகள் இவர் கொண்டபடியே சிவபெருமானுக்கு ஒவ்வொரு முகத்திலும் ஐந்துமுகங்களிருப்பினும் ஊர்த்துவ முகத்தால் சிவாகமங்களும் தத்புருஷாதி அதோமுகங்களால் வேதங்களும் வந்ததெனக் கூறுவதால் இச்சித்தாந்திகள் கூறும் வேதாகமோற்பத்தி ஊர்த்துவ பஞ்சவதனங்களாயிருப்பதால், இவர் அதோ பஞ்சவதனங்களிலுள்ள ஊர்த்துவ முகத்தால் வேதங்கள் வந்ததென்பது ஊர்த்துவமுகோற்பவமாமாறெங்ஙனம், எத்திறத்தும் சித்தாந்திகள் கூறும் பொருளுக்கும் ஏனையோர் கூறும் பொருளுக்கும் வேற்றுமையுளதாகலின் சித்தாந்திகளேயன்றோ வேதாகமங்களுக்கு ஊர்த்துவமுகோற்பவம் சாதித்துள்ளாரென்பது நன்கு விளங்கும். ஈசானத்தை நோக்கத் தத்புருஷாதி அதோமுகங்களாயிருப்பினும் ஊர்த்துவபஞ்சவதனங்களிற் சேர்ந்துள்ள காரணம்பற்றி இப்பஞ்சவதனங்களால் வெளிப்பட்ட வேதாகமங்கள் ஊர்த்துவமுகோற்பவமென்பதாய்ச் சாதிக்க என்றும் பின்னிடார். இவர் கீழ்முகம் நான்கினுமுள்ள ஊர்த்துவமுகங்களில் வேதங்கள் வந்ததெனப் பொருள் விரிக்கின் இவை அதோ முகத்தினூர்த்துவ முகமேயன்றி ஊரத்துவமுகத்திலக்கியம் பெற்ற பஞ்சவதனங்களன்றாதலால் ஊர்த்துவமுகோற்பவம் கூறியது எங்ஙனேகனம்பெறும். சைவசமயிகள் உயர்வு தாழ்வு கூறுமிடங்களில் தாழ்வும் உயர்ந்துநிற்கக் காரணமும் ஏனையோர் கூறும் உயர்வு தாழ்வுகளில் உயர்ந்ததும் தாழ்ந்த நிலைமைக்கு வருதற்கேதுவுந் தொன்று தொட்டு வருமியற்கையாதலின் நவீனமாய் ஓர்விவாதம் புதுக்கி வியவகரிக்க வரும் சிற்சிலரை வேதாகமங்களாகிய மெய் நூலே இவ்வழியைத்தடுத்து உண்மையை உபகரிக்குமென்பது நிச்சயம். இவ்வாறுள்ள ஞாயங்கள் பலவுள அவைகளையெல்லாம் எடுத்துதகரிக்கில் விரியுமாதலாலிம்மட்டில் நிறுத்தினேம் விரிவுள்ளவை சமயநேர்ந்துளி விரித்துக்காட்டுவோம்.

இவர் வெளியிட்டுள்ள ஸ்ரீகண்ட பாஷ்யத்திலும் சித்தாந்தத்திற்கு முரணிய வேறு வேறு கருத்துக்களையிடையிடையே நாட்டப்பட்டிருத்தலால் அவற்றின் உண்மைக் கருத்தும் பின் வரவிருக்கும். இது நிற்க இவர் சன்யாசியாரைக் கண்டித்துச் சைவசித்தாந்தத்தை நிலை நாட்டற் கறிகுறியாய் வெயிளிட்ட வச்சிரதண்டமும் தாந்தரீக துண்ட கண்ட கண்டனமும் சித்தாந்தத்திற்கிடையூறுண்டாக்குமன்றி நிலைநாட்ட வல்லதோ சன்யாசியார் சிவாகமங்களைக் காட்டிலும் வேதங்கள் உயர்ந்த தென்றும் சிவாகமங்கள் பரிபாகமற்ற சூத்திரர்க்கே விதித்துள்ள தென்றும் சொல்கின்றார் இவரும் அவ்வாறே சொல்லுகின்றார். சன்யார் பிராமணருக்கு வைதீக தீக்ஷையே போதுமான தென்றார் இவரும் வேதங்களில் அதிகாரமுள்ளவர்களுக்கு வைதிக பாசுபதமே கொள்ளத்தக்க தென்றார். சன்யாசியார் வேதமந்திரங்களாற் செய்யப்பட்ட விபூதியை வைதீகர் அணிவதற்குரிய தென்றார். இவரும் சிவாக்கினிபஸ்மாவும் விரஜானல பஸ்பமாவும் சமத்துவமுடைய தென்றார். சன்யாசியார் பரார்த்த பூசைக்கு தேவலகத்துவ தோசங்கூறி நின்றார் இவர் அத்தோஷத்தை ஸ்மிருதி முக்தாபலத்தால் ஆராய்ந்து பரிகரித்தொதுக்க முயன்றார். இவற்றை நோக்கும்போது சன்யாசியார் செய்த சைவதூசணங்களைக் கண்டித்தாரென்பது போய் தூசணத்திற் குடந்தையாயிருந்து அவரைத் தூக்கிவிட்டவரென்றேமேலோர்கிரகிப்பரென்க. மேலும் இவருக்குச் சைவசமயிகள் முக்தாபலத்தைப் பிரமாணமாகக் கொள்ளட்டும் அப்புறமனு ஸ்மிருதி முதலியவற்றால் சிவாகமங்களைப் பூருவ பட்சமாக்கிஸ்மிருதி அனுஷ்டானத்தையே சைவர்களையும் செய்யும்படி பின் சரிப்படுத்திக் கொள்ளலாமென்னும் அபிப்பிராயத்துடனே முக்தாபலத்தைப் பிரமாணமாக்க காட்டியிருந்தாலுமிருக்கலாம் நம்சைவஸமயிகள் முன்னர் இவர் சுருதி யுக்தி அனுபவம் ஒன்றும் செல்லா தென்பதையிவருணரார், சைவர்கள் இந்தஸ்மிருதியை நிர் மூலதர்மமென ஒதுக்கி நிற்பவர்களாதலின் இதைக் கோடி கோடியாய் வருஷித்துப் பிரமாணமாக்க முயலினும், இதை ஒருபோதும் கைக்கொள்ள விரும்பார். விரும்பார். இவர்

ஸ்ரீனிவாசதீக்ஷதரை ஜெயித்து வெற்றிக் கொடி நாட்டியிருப்பதாய்க் கூறிய விடங்களில் வச்சிரதண்டம் தாந்திரீகதுண்ட கண்டன கண்டனம் இவைகளின் கருத்துக்களே மேனோக்கி நிற்பதாலும் தீக்ஷதர் வேதோத்கிருஷவாதி யாதலினாலும் இவர் உபநிஷத்துக்குப் பரத்துவம் கூறி நாட்டிய கொடியானது தீக்ஷதருக்குச் சொந்தக் கொடியேயன்றி இவருக்கதுபடர் கொடியேயாகும். நம்பெருமான் துவஜாரோகணத்தில் திவியஸ்வாயம்புவாதி க்ஷேத்திரங்களில் ஆச்சாரியப் பிரமுகர்கள் நாட்டியிருக்கும் விருஷத்துவஜக் கொடிமுன் ஏனையோர் நாட்டுங் கொடிபடருமூனைக் கொடியேயன்றி வேறென்னென்பதோ.

தீக்ஷிதருக்கும் சைவசித்தாந்திகளுக்கும் வேதாகமதாரதம்மியவாதம் நடந்த தருணத்தில் நமது சுவாமிகளும் பிரம்மஸ்ரீ சாமக்குளம் வெங்கிட்டரமணதாசரவர்களும் ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலரவர்களும் சோமசுந்தர நாயகரவர்களும் விருதை சிவஞானயோகி அவர்களுமே யன்றோ சிவாகம மோத்கவாதஞ் செய்து தீக்ஷதரைப் புறங்காட்டி யோடச் சொய்தார்கள்-இது கற்றோர் மற்றோர் யாவருக்குந் தெரியும் அப்போது வெற்றிக் கொடி நாட்டியவர்கள் சைவசித்தாந்திகளேயன்றி அய்யர்தா நாட்டியதாய்க் கூறும் வெற்றிக் கொடிதான் யாதோ அது முதலிது காறும் உபநிஷித்துக்களைப் பரமெனக் கூறும் வாதத்தை நிறுத்தினாரில்லை. மேலே காட்டிய சித்தாந்த சைவர்கள் உபநிஷத்தை அபரமெனக்கூறிச் சிவாகமங்களைப் பரமெனச் சாதித்து வந்தார்களாதலின் அய்யர் சொல்லும் பரம்சேற்றில் நட்டகம்பம் போலாயின. இதனால் சன்யாசியார் வெளியிட்டுள்ள புத்தகத்தை இவர் புத்தகம் கண்டித்து விட்ட தென்பதெங்ஙனம் பொருந்தும் சிற்சிலவணிகர் நமது சுவாமிகளால் வெளியிட்ட வேதாகம தாரதம்மியத்திலும் எம்மால் வெளிப்படுத்திய சிவநிந்தகப்ரச்சன்ன பௌத்தக் ரோடபங்க வச்சிராயுதத்திலும் மனம்புழுக்க முற்று அம்மெய்ப் பொருளுணரும் பரிபவமற்று நமது சுவாமிகள் வரைந்துள்ள பிரபலஞாயத்தை இவர் கண்டிபரென அபிப்பிராயமேற் கொண்டு இப்புத்தகமிரண்டை வெளிப்படுத்தத் தூண்டினர் இப்புத்தம் சன்யாசியாரையாவது நமது

சுவாமிகளேயாவது கண்டித்தற்கு வலியுண்டாகாதாகையால் இவர் வீண் பிரயாசைப்படுவதால் யாது பயன். இவ்வணிகருள் சிற்சிலர் நமது சுவாமிவளால் வெளியிட்டுள்ள பிரதிஷ்டாகாரிகையில் அருமையான சிவாகமக்கருத்தும் பிரதிஷ்டைக்குரிய விதிவிலக்குகளும் சுத்தம் மிச்ரம் கேவலம் முதலிய பூஜா ஓமாதிபேதங்களும் உத்தமம் மத்திமம் அதமம் அதமாதமமாதி பேதங்களும் மந்திரம் கிரியை பாவனை முதலியவைகளும் சம்பூரணமாய் விளங்கப் பெற்றுள்ள தென்பதையறியாது ஆகமப் பிரவீணரல்லாத சில ஆதிசைவர்களைத் தம்கக்ஷிக்குச் சாதகமாக்கிச் சிவாச்சாரியார் வெளியிட்ட பிரதிஷ்டாகாரிகையானது கும்பாபிஷேக யோக்கியமன்றெனப்புறம் போந்து தூசிக்கத் தூண்டுகிறார் நன்று. நன்று. இவர்கள் சிவபுண்ணியம் சாலச்சிறிப்புடைத்தே இவர்கள் செய்யுங் கும்பாபிஷேகத்திற்கு வருங் குருக்கண்மார் சிறிதும் சிவாகமங்கள் உபாகமங்கள் பத்ததிகள் முதலிய நூற்களை உற்று நோக்காதவர்களாயினுங்கண்டி குண்டல பிதாம்பரம் கவுடுமுதலிய வெளிமயக்கால் தாம் மிக்க சிவாகமவல்லுனரெனப் பிறர் மதிக்கப் பாசாங்கும் பகட்டும் செய்வதுடன் உண்மைநூற்களையும் சைவசமயத்தையும் சுத்தசிவஸாக்ஷாத்கார பரதர்மக் கிரியைகளையும் நோக்காது நிர்மூல தர்மமாகிய ஸ்மிருதியென்னும் படுகுழியில் வீழ்ந்து சிவ புண்ணியம் அவமாய்தத் தளிக்கச்செய்து இவர்களுக்குண்மையாராயச்சியுடைய ஆதிசைவர்கள் பதி நூலுண்மை புகட்டப்புகுவோராயின் இவர்கள் வணிகரிடம்சென்று இக்குற்ற ஆதிசைவர்கள் வீண்வாதம் செய்கின்றார்கள். நீங்கள் மவுனமுற்றிருப்பது தகுதியன்றெனச் சொல்லிச் சண்டைக்கிழுதது விடுமிவர்களாநமது சுவாமிகள் வெளியிட்ட பிரதிஷ்டா காரிகையைக் குற்றமெனச் சொல்லு மாற்றலுடையவர். இங்ஙனம் போதிக்கும் வாய்ச்சாலகமாவதுடையவரா அதுவுமில்லை இதற்குப் பொறாமையொன்றே காரணமல்லது வேறில்லை. இப்பூர்வபக்ஷிகளை எம்போன்றோர் பிரதிஷ்டாகாரியங்களுக்கு மூலாகமமுளதோவென வினவில் அதற்கு எங்களிடம் மூலாகமுமில்லை உபாகமமுமில்லை பத்ததியுமில்லை எங்கள் பாட்டன் பூட்டன் எழுதிவைத்த சுவடி

யொன்றுமட்டுமே யிருக்கின்றது அதற்கு விரோதமாய் சிவாச்சாரியார் மூலாகமங்களெனவும் பத்ததியெனவும் வெளியிட்டு வருகின்றூர். அதைப்பார்க்குந்தோறும் எங்களுக்குத்தலையும் நெஞ்சும் சுழல்கின்றது. விஷயங்கள் ஒழுங்காயிருப்பினும் நாங்கள் அவைகளையெல்லாம் பார்த்துணரத்தக்க படிப்பாளிகளுமல்லர் எங்களுக்கவற்ருல் ஆகவேண்டியதுதானென்னே இதனுலெங்கள் பழக்கத்திலுள்ள விஷயங்களை அவர் பத்ததியானது ஸ்மார்த்தமெனக்கண்டித்தொதுக்குகின்றது. இதைச் சிவாகமதர்மமென்று சாதிக்கப்புகுமாற்றலு மெங்களுக்கில்லை. அவர் வெளியிட்ட பத்ததிகளையெல்லாம் புதிதென யாவருமொன்று சேர்ந்து கூறுவோமாயின் வணிகரும் சரியென்ருெப்பி நம்மையங்கீகரித்தற்கனுகூலமாயும் மேதாவிகளான சைவ சித்தாந்திகள் மட்டுமே நாங்கள் கூறுவதை பூர்வபக்ஷம்செய்து வருகின்ருர்கள். இதுவும் சிவாச்சாரியார் வெளியிட்ட காரிகையால் எங்களுக்கு நேர்ந்ததுன்பமேயன்றி வேறல்லை இவர் காரிகைவெளிவராதிருந்தால் எங்களிஷ்டம்போல் வேண்டுமாறு செய்வோம் யாரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் வணிகர்களுக்கும் சிவாச்சாரியார் வீண்வாத முடையவரென்னுமருந்தைத் தலைவரையிலேற்றிக் கும்பாபிசேக காரியங்களில் அவர் பிரக்ஞையே இல்லாதிருருக்கச் செய்திருக்கின்ருேம் அவரெங்கேனுமோரிடத்திற்றிடீரென்று வந்து விடுவாராயின் யாங்கள் பக்கபாட்டில் பேசுபர்வகளேயன்றி வேறில்லை விஷயங்கள் தெரிந்தாலல்லவோ நேரில் பேசப்போகின்ருேம் அவர் உண்மையான சிவாகமங்கள் எவ்வளவு காட்டினும் அவைகள் யாவும் பொய்யென்பதைத் தவிர எங்களுக்கு வேறு பதில் சொல்லத்தெரியாது அவர் நேரிலிருக்கும்போது நாங்கள் எங்களுக்குற்ற ஆற்றல் முழுதும் செலுத்திவாதித்தாலும் எங்கள் பருப்பு வேகாது. ஒருக்கால் வணிகர் எங்களுடன் கலந்து பாரபக்ஷமாய் அவர்பால் அவமதிப்பாயிருப்பினும் தேவஸ்தானம் தர்மசீலர்கள் ஒருங்கு சேர்ந்து வணிகர் இவ்விஷயத்திற் செய்வது அசாஸ்திரீக நெறியெனக்கண்டித் தொதுக்குவார்கள். இதனல் யாங்கள் என்னச் செய்யக்கூடும் இச்சாஸ்திராராயச்சியையும் உண்மை அறிந்து

கொள்ளாமையும் நினையாத நாங்கள் வீண்வாதமெனத்தூசிக்க நேர்ந்தது எங்களைப்போல அறியாத பிரபுக்களது செவிகளி லேறினும் ஏறுவிடினும் அதில் எங்களுக்குக் கவலையில்லையென் போர்களையே யன்றோ சிற்சில வணிகர் கும்பாபிஷேகத்தில் சர் வசாதகமாக்கிச் சிவபுண்ணியத்தை அவமாக்கக்கருதுகின்றார்க ளென்பதுயாவருமறிவார்கள் நமது சுவாமிகள் கும்பாபிஷேகா திகளில் உபஜீவித்துவரக் கருதிப்பிரதிஷ்டா காரிகையை வெளி யிட்டவரன்று காலக்கிரமமாய் மூலாகமம் உபாகமம் பத்ததி முதலிய மெய் நூல்கள் யாவும் தலை தடுமாறிச் சிவபுண்ணியங் கள் நாளுக்குநாள் குறைவுபட்டு வருதலை நோக்கி அவ்வாறு குறைவுபடாதபடி உலோகோபகாரமாக இந்தச்சத்காரியத்தைச் செய்யத்துணிந்தனர். இதில் சந்தேகமுள்ளோர் இதற்குரிய விதிவிலக்குகளாகிய சித்தாந்தங்களைக்கொண்டு நேரிலன்றோ விவாதித்தல்வேண்டும் அதைவிட்டுக் கும்பாபிஷேகக் கூட்டத் தில் புறம்போந்து தூசிப்பதில் யாதுபயன் இது யாருமில் லாத காட்டில் அஸ்வமேதம் செய்தகதையாகவன்றோ இருக் கின்றது.

நாம் கருவூர் கும்பாபிஷேக விஷயமாய் விக்ஞாபனமென வெளிப்படுத்தியுள்ள பத்திரிகைக்கு மேதாவிகளான ஆதிசைவ ர்கள் சிலர் நமது சுவாமிகளிடத்தில் நேரே யுண்மை விஷயங் களைப் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பவர்கள் தவிர எங்கள் பாட் டன் பூட்டன் புத்தகந்தான் பெரிதென எதிரியற்ற கும்பாபி ஷேகக் கொட்டகையில் வாய்டம்பங்காட்டி மிரட்டிவரும் பூர்வ பக்ஷியார்களில் ஒருவரேனும் இதுகாறும் விடையளிக்கத் துணி ந்து இறங்கேந்தினோரில்லை வேதாரணிய விஷயமாய் ஆசங்கித்து ள்ள சாஸ்திரா சங்கைக்கு விடைவரவுங் காண்கிலோம் இவற் றால் நமது சுவாமிகள் வெளியிடும் உண்மைநூற்கள்யாவும் சிவா கமங்களுக்குப் புறம்பாகாதென்பது சைவசித்தாந்திகள் யாவ ர்க்கும் துணிவாம் மற்றுள்ளவை பின் வரவிருக்கும்.

## வாழ்த்துக்கவி.

சைவசித் தாந்தம் வாழ்கச் சம்பந்த ராதி வாழ்க
மெய்கண்ட நாதன் வாழ்க விளங்குமாக மங்கள் வாழ்க
வுய்வித்த குருவாஞ் சத்தி யோஜாதன் வாழ்க வென்றும்
பொய்தவிர்த் தானு மின்றூற் பொருந்தி வாழ்ந் திருக்கமாதோ

Wednesday Review Press, Trichinopoly,